TO SHARE THE LIGHT

# தீபகச் சுடர்

ஜுன் 2025

தீபம் 14 சுடர் 1

தீபகம் - தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம், 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.



# இதயம் சார்ந்த கல்வி

# தீபகத்திலிருந்து இறையாசீர்



**அன்பான தீபகச் சுடர் வாசகர்களே,**

## இதயம் சார்ந்த கல்வி

புதிய கல்வியாண்டிற்கான தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் மதிப்பீடுகளின் மறைப்பணி மையத்திலிருந்து வாழ்த்துக்கள்.

இப்புதிய கல்வியாண்டை மகிழ்ச்சியுடனும், உற்சாகத்துடனும், எதிர்நோக்கான கனவுகளுடனும் தொடங்கும் இந்தக் கல்வியாண்டில் நம் மாணவர்களுக்கும், ஆசிரியர் பொதுமக்களுக்கும், பெற்றோர்களுக்கும், புதிய சலேசிய பங்கு தந்தையர்களுக்கும், ஞாயிறு மறைக்கல்வி ஆசியர்களுக்கும் என் உளமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இப்புதிய கல்வியாண்டின் தொடக்கத்தில் கடவுள் உங்கள் ஆர்வத்தையும், அர்ப்பணிப்பையும் நிறைவாக ஆசீர்வதிக்க நான் வேண்டுகிறேன். இக்கல்வியாண்டு நம்மை வெறும் கல்வியில் சிறந்தவர்களாக மட்டும் அல்ல, விசுவாசத்திலும், ஞானத்திலும் வளர வழிவகுக்கும் என வாழ்த்துகிறேன்.

சிறந்த கல்வி என்பது புத்தகங்களையோ, அல்லது தேர்வுகளையோ அடிப்படையாகக் கொண்டதல்ல. மாறாக, சிறந்த கல்வி ஒருவரை முழுமையான மனிதனாக உருவாக்குவதில் இருக்கின்றது என்றால், அது மிகையாகாது. ‘முழுமையான மனிதர்” என்பவர் யார் எனில், யார் ஒருவர் தாம் பெற்றக் கல்வியைக்கொண்டு **உண்மை, இரக்கம், நீதி, சமத்துவம், அன்பு, நம்பிக்கை** போன்ற நிலைத்த மதிப்பீடுகளில் வேரூன்றி வாழ்ந்து பிறருக்கு கற்பிக்கிறார்களோ, அவர்களே சிறந்த கல்வியாளர், சிறந்த கிறிஸ்தவர். நமது கல்வி நிலையங்களில் கற்றுக்கொண்ட இந்த மதிப்பீடுகளை பள்ளிகள், கல்லூரிகள், குடும்பங்கள், சமூகம் என ஒவ்வொன்றையும் சென்றடைந்து ஒளியாக, உப்பாக, புளிப்பு மாவாக உலகை மாற்ற வேண்டும். கல்வி என்பது இந்தப் பணியில் சோர்வடையாமல் நாம் வாழவும், பிறருக்கு கற்றுத்தரவும், நம்மை ஊக்கப்படுத்தவும் வேண்டும்.

அன்பான ஆசிரிய பெருமக்களே! சலேசியர்களே! நமது சலேசிய சபை ஒரு சிறிய மறைக்கல்வியோடு துவக்கப்பட்டது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். நமக்கு மறைக்கல்வியைப் போதிப்பது என்பது அடிப்படையில் கிறிஸ்துவை அறிவிப்பதாகும். எனவே, தொன்போஸ்கோவைப் பின்பற்றி நாம் எந்த ஒரு சூழ்நிலையிலும், வாய்ப்புகளிலும் மறைக்கல்வியையும், கிறிஸ்துவத்தையும் அறிவிக்க அழைக்கப்பட்டுள்ளோம். ‘சிறந்த ஞானம்” என்பது கிறிஸ்துவை அறிந்திருத்தல். அதுபோலவே ‘உயர்ந்த மகிழ்ச்சி' என்பது இந்த பேருண்மையை அறிவித்தல் (ச.வி. 34). நம் பணி புனிதமானது, நாம் பெறும் தகவல்களையும், அறிவையும் மட்டும் கற்பிக்காமல் புதிய சமூகத்தை உருவாக்கும் சிற்பிகளாகச் செயல்பட வேண்டும். ‘கல்விப்பணி', தொன்போஸ்கோ கூறுவதுபோல, ‘இதயம் சார்ந்தது”. இதயங்களை அன்பாலும், பொறுமையாலும், உடன் இருப்பினாலும் மட்டுமே தொட முடியும். நமது புன்னகை, பொறுமை, இரக்கம், அன்பு, கடவுளின் ஞானம், பகுத்தாய்தல் ஆகியற்றின் மூலம் ஒரு திருப்பு முனையைக் கொண்டு வர முடியும்.

சலேசியர்களே! இவ்வாண்டில் நம் உடனிருப்பை மாணவர்களிடையே நெருக்கமாக நடந்து நமது துறைகளில் ஒரு விளையாட்டு மைதானமாக, கற்பிக்கும் வகுப்பறைகளாக கடவுள் அனுபவம் பெறும் கோவில்களாக மகிழ்ச்சி, பாதுகாப்பு இருக்கும் இல்லங்களாக மாற்றுவோம். நல்ல நண்பர்களாக, நல்ல தந்தையர்களாக, நல்ல மேய்ப்பர்களாக அவர்களை வழிநடத்துவோம்.

அன்பு மாணவர்களே! பண்புடனும், தைரியத்துடனும், நம்பிக்கையுடனும், கடவுளின் ஆசீருடனும் இவ்வாண்டைத் துவங்க, தூய ஆவியானவர் நம் ஒவ்வொருவரையும் இக்கல்வியாண்டில் வழிநடத்துவாராக.

என்றும் அன்புடன்
அருட்பணி. **ஜேசுதாஸ்** ச.ச
இயக்குநர் - தீபகம்

## பகுதி 1 : வழிபாட்டு வழிகாட்டி

01.06.2025 ஆண்டவருடைய விண்ணேற்றம் பெருவிழா - திருப்பலி 02
05.06.2025 புனித போனிப்பாஸ் - திருப்பலி 03
06.06.2025 புனித நார்பெர்ட் - திருப்பலி 04
08.06.2025 பெந்தக்கோஸ்து ஞாயிறு பெருவிழா - திருப்பலி 05
11.06.2025 புனித பர்னபா - திருப்பலி 06
12.06.2025 அரு. பிரான்சிஸ் கெசி மற்றும் தோழர்கள் - திருப்பலி 08
15.06.2025 தூய்மைமிகு மூவொரு கடவுள் பெருவிழா - திருப்பலி 10
21.06.2025 புனித அலோசியுஸ் கொன்சாகா - திருப்பலி 11
22.06.2025 கிறிஸ்துவின் தூய்மைமிகு திருவுடலும் திருஇரத்தமும் பெருவிழா - திருப்பலி 12
23.06.2025 புனித ஜோசப் கபாசோ - திருப்பலி 14
24.06.2025 திருமுழுக்கு யோவானின் பிறப்பு பெருவிழா - திருப்பலி 15
27.06.2025 இயேசுவின் தூய்மைமிகு இதயம் பெருவிழா - திருப்பலி 16
28.06.2025 புனித கன்னிமரியாவின் மாசற்ற இதயம் - திருப்பலி 17
29.06.2025 புனித பேதுரு, பவுல் திருத்தூதர்கள் பெருவிழா - திருப்பலி 18

## பகுதி 2 : நம்பிக்கையில் வளர...

அருளாளர் பிரான்சிஸ் கெசி மற்றும் தோழர்கள் பற்றிய வரலாறு 20
இயேசுவின் தூய்மைமிகு இதயம் பற்றிய சிறப்பு நிகழ்வுகள் 22
பள்ளிகள் திறப்பு - பொது செபவழிபாடு 24
திருஅவையின் செய்திகள் 26

## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

## 01.06.2025 ஆண்டவருடைய விண்ணேற்றம் பெருவிழா திருப்பலி

**முன்னுரை**

திருமதி. டிலைலா சேவியர்

I. திப. 1: 1-11 II. எபி. 9: 24-28, 10:19-23 லூக். 24: 46-53

இறையேசுவில்பிரியமானவர்களே,இன்றுதாயாம்திருஅவைஇயேசு ஆண்டவர் மாட்சிமையோடும், மகிமையோடும் விண்ணேற்றம் சென்ற நாளை சிறப்பிக்கின்றது. விவிலியத்தில் உள்ள சில இறைவார்த்தைகள் ஆண்டவர் இயேசு எவ்வாறு விண்ணேற்றமடைந்தார் என்பதை தெளிவாக எடுத்துரைக்கின்றது. கடவுள் இயேசுவை உயிர்த்தெழச் செய்தார், இதற்கு நாங்கள் அனைவரும் சாட்சிகள். உலகின் கடையெல்லைவரைக்கும் எனக்கு சாட்சியாய் இருப்பீர்கள் என்றார். இவற்றை சொன்னபின் அவர்கள் கண்கள் முன்னபா அவர் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். இயேசு ஆண்டவர் மாட்சியோடு விண்ணகமடைந்தார் என்றும் கடவுளும் அவரை மிகவும் உயர்த்தி எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு வழங்கினார், அவர்களோடு பேசியபின்பு ஆண்டவர் இயேசு விண்ணேற்றமடைந்து கடவுளின் வலப்புறம் அமர்ந்தார்.

அதே உடலோடு விண்ணகமும் சென்றார். எப்படியெனில் அவர் சிலுவையில் நொருங்குண்ட அவர் உடல் சிலுவையில் அவமானப்படுத்தப்பட்ட, சிதைக்கப்பட்ட, நிராகரிக்கப்பட்ட உடலோடு உயிர்த்தெழுந்து விண்ணகம் சென்ற உடலானது நிரந்தமல்ல, மாறாக மாட்சியுடன், மகிமையுடன் விண்ணகம் சென்ற உடலே நிரந்தரமானது. இந்த உடலைத்தான் நாம் ஒவ்வொருவரும் பெற்றுள்ளோம் என்பதைதான் இந்த விழா நமக்கு நினைவுப்படுத்துகின்றது. ஆண்டவர் இயேசு நமக்காக தந்தையிடம் பரிந்து பேசுகின்றார். அவர் உயிருடன் எழுப்பப்பட்டுப் பரிந்து பேசுகின்றார். வாக்களித்த நம்பிக்கைக்கு உரியவராய் இருக்கிறார். நானே வழியும், உண்மையும் உயிருமாய் உள்ளேன்" என்று சொல்கிறார். தூய ஆவியானவரின் வருகையில் இயேசு தன்னுடைய சீடர்களை விட்டுபிரியும் போது அவர் கொடுக்கின்ற முக்கியமான படிப்பினைதான் தூய ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள் (யோவா. 16:7). இந்த தூய ஆவியானவரே உங்களுக்கு வலுவூட்டுவார் உங்களைத்திடப்படுத்துவார், நம்பிக்கையளிப்பார், இந்த உலகத்தில் நீங்கள் சாட்சியாக வாழ அவரே துணையாக இருப்பாரென்று அவர்கள் திடப்படுத்துகிறார்கள். ஆண்டவராகிய இயேசு திருமுழுக்குப்பெற்ற நம் ஒவ்வொருவரையும் சாட்சியாக வாழ அழைக்கின்றார்.

தூய ஆவியாரின் வல்லமையைப் பெற்றுக்கொண்டு உலகின் கடையெல்லைவரை இயேசுவின் சாட்சிகளாக செயலாற்ற, நற்செய்தியின்படி வாழ கடவுள் நமக்கு வலுவூட்டுவார், திடப்படுத்துவார்

என்ற நம்பிக்கையை இன்றைய ஆண்டவரின் விண்ணேற்பு விழாவில் தூய ஆவியாரின் துணையோடு நற்செய்தியின் சாட்சிகளாக வாழ இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, நற்செய்தியின் தூதுவர்களாக நீர் தேர்ந்தெடுத்த திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் மற்றும் இருபால் துறவறத்தார் அனைவரும் உமது தூய ஆவியின் வல்லமையைப் பெற்று, உலகின் கடையெல்லைவரை விண்ணேற்றமடைந்த ஆண்டவர் இயேசுவின் சாட்சிகளாக செயலாற்றிட வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. வல்லமையும் ஆற்றலும் நிறைந்த இறைவா, நற்செய்திமலர்களாக உலகின் பல இடங்களுக்கு நற்செய்தி பணியாற்ற சென்றிருக்கின்ற, செல்கின்ற அனைவருக்கும் ஏற்படுகின்ற இன்னல்கள், சிக்கல்கள், துன்பங்களிலிருந்து பாதுகாத்து உமது கரமானது இவர்களை பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. எங்களின் புகலிடமான தந்தையே இறைவா, தூய ஆவியாரின் துணையோடு ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு, விண்ணேற்பு உலகிலுள்ளோர்க்கு புதிய மாற்றத்தையும், வாழ்க்கையின் உற்சாகத்தையும் அளித்து, உமது விண்ணக முடிவில்லா வாழ்வை மண்ணுலகில் வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. நோயுற்றோரைத் தேற்றிடும் இறைவா, பலவிதமான நோயினால் பாதிக்கப்பட்டுள்ளோர், பணப்பிரச்சனையினால் வீட்டிலே இருந்து தங்களின் உயிரை மாய்த்துக்கொள்ளும் நிலையில் இருப்போரைக் கண்ணோக்கும், அவர்களின் நோயினை உமது கருணையென்னும் மருந்தினால் நற்சுகமளித்து, பாதுகாத்திட வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 05.06.2025 புனித போனிபாஸ் திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் சுரேஷ்

அன்புக்குரியவர்களே, இன்று நாம் புனித போனிப்பாஸ் அவர்களின் திருவிழாவை நினைவு கூறும் இந்நேரத்தில் அவர் தனது 7வது வயதில் துறவு வாழ்வை மேற்கொண்டு 30வது வயதில் குருவாக அருட்பொழிவு பெற்று 716ல் மறைப்பரப்பு பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். 722ல் திருத்தந்தை 2ம் கிரகோரி அவர்களால் ஆயராக அருட்பொழிவு பெற்று ஜெர்மனி முழுதும் மறைப்பணி செய்யும் பொறுப்பையும் அனுமதி பெற்றார். பல ஆன்மாக்களை மீட்டுவந்த இப்புனிதர் 738ல் திருத்தந்தையின் ஆஸ்திரேலிய நாட்டு பிரதிநிதியானார். குறிப்பாக இவரது காலத்தில் 742 ஏப்ரல் 21ம் நாள் ஆயர் திருச்சங்கம் கூட்டப்பட்டு

பல மாற்றங்களை திருஅவை அங்கீகரித்தது. அதில் ஒன்று ஆண்டிற்கு ஒருமுறை பெரிய வியாழன் அன்று குரு ஆயரின் கரங்களிலிருந்து புனித எண்ணெய் பெற்றுச் செல்வதாகும். 753ல் சுயீடர்சீ என்ற குலத்தில் கிழக்கு கடற்கரைப் பகுதியினைத் தம் மறைத்தளமாக நிர்ணயித்து போதித்தார். பலர் கிறிஸ்தவத்தை தழுவியதால் அங்கிருந்த உள்ளூர் மதவாதிகள் தங்கள் மதம் அழிந்துவிடுமோ என்று அஞ்சி 754 ஜூன் 5ம் நாள், திருமுழுக்கு மற்றும் உறுதிபூசுதல் வழங்க தயாராக இருந்த இப்புனிதரின் இல்லத்திற்கு சென்ற மதவாதிகள் அவரின் தலையை வெட்டினார்கள். அவரோடு 52 பேரை மறைசாட்சியாக்கினார்கள். இப்புனிதரை நினைவு கூறும் இந்நேரத்தில் அருட்பணியாளர்களுக்கு உதவிக்கரம் நீட்டும் குடும்பங்களில் இறையழைத்தல் எப்போதும் தழைத்தோங்கும் என்பதை மனதில்கொண்டு நமது குடும்பங்களிலுள்ள பிள்ளைகளை இறையழைத்தல் பணிக்கு அர்ப்பணிக்கும் நல்ல மனநிலையைப் பெற தொடர்ந்து இத்திருப்பலியில் பக்தியோடு மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தூய்மையின் திருஉருவே இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் துறவிகளுக்காக மன்றாடுகிறோம். குறிப்பாக புதிதாகத் தேர்ந்தெடுக்கும் எம் திருத்தந்தைய உமது பாதம் சமர்ப்பிக்கின்றோம். திருஅவையை வழிநடத்தக்கூடிய அனைத்து ஆற்றல்களையும் அருள்வரங்களையும் நிறைவாக பொழிந்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. படைப்பின் பரம்பொருளானவரே, இயேசு தன்னை கடவுளின் பணியாளராக அல்லாமல் மகனாக வெளிப்படுத்தினார் என்பதை எங்கள் வாழ்வில் நாங்களும் பதவிக்காகவும், தற்பெருமைக்காகவும் செயல்படாமல் பரந்த உள்ளத்தோடும், நேர்மையோடும், பொறுப்புணர்வோடும் செயல்பட வேண்டிய வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. நிறைவின் முழுமையே எம் இறைவா, அன்று பாலைநிலத்தில் உம் வார்த்தைகளை கேட்டுக் கொண்டிருந்த மக்களுக்கு நீர் உணவளித்ததுபோல, எமது வாழ்வில் நிகழும் துன்பவேளையில் நீரே உடனிருந்து உம் ஆசீர்வாதத்தையும் அருளையும் நிறைவாய் அளித்து உடனிருந்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 06.06.2025 புனித நார்பெர்ட் திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

இறையன்பில் ஆர்வமுள்ள இறைச்சமூகமே, இன்றைய நாளில் நாம் நினைவு கூறும் புனிதர் நார்பெர்ட் அரச குடும்பத்தில் பிறந்தவர். இவர் ஆழமான அறிவுத் திறமையும், ஆழ்ந்த தெய்வ பக்தியின்

காரணமாக இளமையிலேயே குருத்துவத்தை இவர் விரும்பினார். ஆனால் இளைஞரானதும் அரண்மனையில் உயர்ந்த குலத்தவரோடு சேர்ந்து உலக இன்பங்களை நாடியதால் குருவாகும் ஆசை குலைந்து விட்டது. ஒருமுறை இவர் குதிரையின் மீதேறி வேறு இடத்திற்கு செல்லுகையில் எதிர்பாராமல் புயல்காற்றும் இடிமின்னலும் ஏற்பட்டது. அப்பொழுது இவருக்குமுன் இடிவிழவே குதிரை மிரண்டதால் கீழே தள்ளப்பட்டார். உடனே "ஆண்டவரே நான் என்ன செய்ய வேண்டுமென விரும்புகிறீர்? என்று அலறினார். "தீமையை விளக்கி நன்மை செய்யப் புறப்படு அமைதியைத் தேடி கண்டுபிடி" என்ற குரல் கேட்டது. அதன்பின் புனித பவுலைப்போல இவரும் மனம்திரும்பினார். தன்னுடைய வாழ்நாளை இறைப்பணியில் செலவழிக்க உறுதிபூண்டார். இறையியல் கற்றுக் குருப்பட்டம் பெற்றார். தமக்குரிய சொத்துக்களை ஏழைகளுக்கு பகிர்ந்து கொடுத்துவிட்டு கடுந்தவம் புரிந்து, தினமும் ஒருவேளை மட்டும் உணவருந்தி தூய வாழ்வு வாழ்ந்தார். இறை ஏவுதலின்படி துறவற சபையை நிறுவினார். மிகவும் எளிமையான வாழ்வை மேற்கொண்டார். இவர்களின் சபை நற்கருணை நாதருக்கே முக்கியத்துவம் தந்தது. இப்புனிதர் இந்த நற்கருணை பக்தியை சிறப்பான முறையில் கற்றுத் தந்து தாமும் இறுதிவரை நற்கருணைப் பக்தியைக் கடைபிடித்தார். இவர் 500க்கும் மேற்பட்ட துறவற இல்லங்களை உருவாக்கினார். பெண்களுக்கும் ஒரு சபையை இவர் ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது. தனது 53ஆம் வயதில் இறைவனடி சேர்ந்தார். நமது வாழ்விலும் இறைவனுக்கேற்ற மக்களாக வாழ நற்கருணை ஆண்டவர்மீது ஆழ்ந்த நம்பிக்கையும் விசுவாசமும் கொள்ள இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. விண்ணுக்கும் மண்ணுக்கும் முதல்வரே எம் இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவருக்கும் நல்ல உடல் உள்ள நலம் தரவும் இவர்களுக்கு ஏற்படும் துன்பங்கள், எதிர்ப்புகள், பிரச்சனைகள் இவைகளிலிருந்து அமைதியும் தங்களின் துறவற வாழ்வில் இறுதிவரை நிலைத்திருக்கும் வரத்தையும் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. நற்கருணை நாதரே இறைவா, இன்றைய திருநாளை சிறப்பிக்கும் இப்புனிதரைப் போல நாங்களும் இறைவனின் சித்தத்திற்கேற்ப வாழவும், நற்கருணை ஆண்டவரிடம் நம்பிக்கையும், பக்தியும் விசுவாசமும், கொண்டு நன்றியோடு ஆராதனை செலுத்தும் வரத்தை தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.
3. எங்களை வழிநடத்தும் இறைவா, எம் இளம்பெண்கள், இளைஞர்கள், சிறுவர், சிறுமியர் அனைவரையும் உமது கரத்தில் ஒப்புக்கொடுக்கின்றோம். இவர்களுக்கு நல்ல உடல் நலமும் இறைஞானமும், கல்வி அறிவும் தந்தருளும். இவர்களின் எதிர்காலம்

உமது சித்தப்படி நடக்கவும் உம்மில் ஆழ்ந்த நம்பிக்கையும், விசுவாசமும் கொண்டு தூய்மையான வாழ்வு வாழ வரமருள உம்மை மன்றாடுகின்றோம்.

## 08.06.2025 பெந்தக்கோஸ்து ஞாயிறு பெருவிழா திருப்பலி

**முன்னுரை**

திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I. திப. 2: 1-11 II. உரோ. 8: 8-17 யோவா. 14: 15-16,23-26

இறையேசுவில் பிரியமானவர்களே, இன்று நாம் திருஅவையின் பிறந்தநாளையும்,தூய ஆவியாரின் பெருவிழாவைக் கொண்டாடுகின்றோம். திருஅவை பிறந்த நாளிலே மூன்றாம் ஆளாகிய தூய அவியாரை நம்மீது பொழிந்து நம்மை சத்தியத்தின் பாதையில் வழிநடத்துகிறார் நம் இயேசு கிறிஸ்து. தூய ஆவியாரின் பெருவிழாவை பெந்தகோஸ்தே திருவிழாவாக இன்று கொண்டாடி மகிழ்கின்றோம். "பெந்தகோஸ்தே" என்றால் ஐம்பதாவது நாள் என்று பொருள். இன்றைய முதல் வாசகம் அன்னை மரியாள்மீதும், திருத்தூதர்கள்மீதும் தூய ஆவியானவர் இறங்கி வந்த நிகழ்வை எடுத்துரைக்கிறது. தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட சீடர்கள், திருத்தூதர் பேதுருவின் தலைமையில் நற்செய்தியைப் பறைசாற்றுவதையும், அவர்கள் பல்வேறு மொழிகளில் பேசுவதைக் கேட்டு மக்கள் வியப்படைவதையும் இங்கு காண்கின்றோம். உயிர்த்த ஆண்டவர் மரணத்தின்மீது தான் கொண்ட வெற்றியின் அடையாளமாகச் சீடர்களுக்கு ஒரு பரிசு கொடுக்கிறார். அந்த பரிசுதான் தூய ஆவியானவர். அதே ஆவி தேவைகளை நமக்குத் தெரியப்படுத்தி, அவற்றை நிறைவு செய்யக்கூடிய வல்லமையையும் நமக்குத் தந்து கொண்டிருக்கிறார்.

இரண்டாம் வாசகத்தில் ஊனியல்புக்கு ஏற்ப வாழ்வோர் கடவுளுக்கு உகந்தவர்களால் இருக்க முடியாது. ஆனால் கடவுளின் ஆவி நமக்குள் குடிபுகும்போது நாம் ஆவிக்குரிய இயல்பை அணிந்துக்கொண்டு கடவுளின் மக்களாக இயங்கமுடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இன்றைய நற்செய்தியில், தூய ஆவியாராம் துணையாளர் நமக்கு அனைத்தையும் கற்றுத்தருபவராகப் பார்க்கிறோம். தூய ஆவியார், திருஅவையின் பல்வேறு காலக்கட்டங்களில் என்னென்ன தேவையோ அவைகளைத் தெரியப்படுத்தி அவற்றை நிறைவு செய்தும் வருகிறார். தூய ஆவியானவர் என்பவர் ஓர் ஆற்றல் வேறுபாடுகளைக் களைந்து ஒற்றுமையை ஏற்படுத்த வல்லவர். தூய ஆவியின் ஆலயங்களாக அழைக்கப்பட்டுள்ள நாம் ஆவிக்குரிய செயல்களில் ஆர்வமாக செயல்பட பிறரை அன்பு செய்து வாழும் தன்மை பெற வரம் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. புதிய திருத்தந்தையை எங்களுக்கு தந்தவரே எம் இறைவா, திருத்தந்தையின் அனைத்து கருத்துக்களுக்காகவும், அவரின் உடல் நலத்திற்காகவும், அவரின் பெற்றோருக்காகவும், உற்றார்

உறவினர்கள், நண்பர்கள், உடன்பணியாளர்கள் அனைவரையும் நீர் கருணைக்கூர்ந்து அவர்களின் பணியினையும், செயல்திட்டங்களையும் உமது தூய அவியாரின் அருட்கொடைகளால் நிரப்ப வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. வழிநடத்தும் வல்லவரே எம் இறைவா, நாட்டையாள்வோர் அனைவரையும் ஆசீர்வதித்து, புனிதப்படுத்தி, அவர்கள் மக்களின் நலனில் அக்கறைக்கொண்டவர்களாகவும், அவர்களின் தேவைகளை உணர்ந்து அறிந்து செயல்படவேண்டிய நல்ல எண்ணங்களை இவர்களுக்கு அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. ஞானத்தின் ஊற்றே எம் இறைவா, எங்களின் குழந்தைகளுக்கு கல்வி கற்றுத்தருபவர்களுக்கும், அவியின் வரங்களாகிய ஞானம், புத்தி, அறிவு போன்றவைகளை நிறைவாக அளித்து, தங்களின் குழந்தைகளாக பாவிக்கும் மனப்பக்குவத்தைத் தந்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. அமைதியின் இருப்பிடமானவரே, எங்களிடையே பெரும் போராட்டங்களும், தீவிரவாதங்களும், வன்கொடுமைகளும், பாலியல் பலாத்காரமும் தலைவிரித்தாடுகின்ற இவ்வேளையில் நீர் இவர்களுக்கு உற்றத்துணையாக இருந்து அனைவரும் ஒற்றுமையோடும் சகோதரத்துவ உணர்வோடு வாழும் நல்லுள்ளம் கொண்டவர்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 11.06.2025 புனித பர்னபா திருப்பலி

**முன்னுரை** திருமதி. பத்மாவதி

"இறைவார்த்தையை அறிவி, வாய்ப்புக்கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் இதைச் செய்வதில் நீ கருத்தாய் இரு" (2திமொ. 4:2) என்பதற்கிணங்க வாழ்ந்தவர் திருத்தூதர் பர்னபா. இவரின் விழாவை இன்று நாம் கொண்டாடுகிறோம். பர்னபா என்றால் "ஆறுதலின் மகன்", "உற்சாகத்தின் மகன்," "ஊக்குவிக்கும் பண்பாளன்" என்பது பொருள். இவர் சைப்பிரசு தீவைச்சார்ந்த லேவியர் ஆவார். திருத்தூதர்களால் பர்னபா என்று அழைக்கப்பட்ட இவரின் இயற்பெயர் யோசேப்பு (திப. 4:36) ஆகும். பவுல் மனம்மாறிய பின் பர்னபாதான் அவரை எருசலேமில் திருத்தூதர்களிடம் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தினார் (திப. 9:27). பர்னபாவின் சீரிய பணியையும் அதில் அடைந்த வெற்றியையும் கண்ட பவுல் தன்னையும் அவருடன் இணைத்துக் கொண்டார்.

அந்தியோக்கிய திருஅவையில் பர்னபா நீகர் எனப்படும் சிமியோன், சீரேன் ஊரானாகிய லூக்கியு, குறுநில மன்னன் ஏரோதுவுடன் வளர்ந்த மனாயீன், சவுல் ஆகியோர் இறைவாக்கினராகவும் போதகராகவும், நோன்பு இருந்து ஆண்டவரிடம் மன்றாடிய போது "பர்னபாவையும்

சவுலையும் ஒரு தனிப்பட்ட பணிக்காக நான் அழைத்திருக்கிறேன் அந்த பணிக்காக அவர்களை ஒதுக்கி வையுங்கள்" என்று தூய ஆவியார் அவர்களுக்கு கூறினார். எனவே அவர்கள் நோன்பிருந்து இறைவனிடம் வேண்டி தங்கள் கைகளை அவர்கள் இருவர்மீதும் வைத்து திருப்பணியில் அமர்த்தி அவர்களை அனுப்பி வைத்தார்கள் (திப. 13:1-3).

பர்னபா மாற்குவைக் கூட்டிக்கொண்டு சைப்பிரசுக்குச் சென்றார். இன்றைய மத்தேயு நற்செய்தியில் 5:1-12 ஆண்டவர் இயேசு என்றும் அழியா எட்டு வாக்கியங்களை மலைப்பிரசங்கத்தில் மொழிந்தார். பின் அவர் "என் பொருட்டு மக்கள் உங்களை இகழ்ந்து, துன்புறுத்தி, உங்களைப்பற்றி இல்லாதவை பொல்லாதவையெல்லாம் சொல்லும்போது நீங்கள் பேறு பெற்றவர்களே, மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள், ஏனெனில் விண்ணுலகில் உங்களுக்குக் கிடைக்கும் கைமாறு மிகுதியாகும்." ஆண்டவரது கூற்றுக்கிணங்கவே சைப்பிரசு சென்று பர்னபா அங்கு நற்செய்தி அறிவித்து கல்லால் எறியப்பட்டு 64ம் ஆண்டு இறந்தார். பன்னிரு திருத்தூதர்களுள் ஒருவராக இல்லாதபோதும் பவுலைப்போலவே பர்னபாவும் திருத்தூதர் என்றே அறியப்படுகிறார். இத்திருப்பலியில் நாமும் பர்னபாவைப்போன்று தளராத உழைப்பும், குறையாத ஆர்வமும் உடைய பணியாளர்களாக நற்செய்திக்குச் சான்று பகர நல்ல மன உறுதியைத் தரும்படி இறைவனை மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல இறைவா, உம்மால் திருப்பொழிவு செய்யப்பட்ட திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் அனைவரையும் உமது தூய ஆவியின் ஆற்றலால் வழிநடத்தி எந்தவொரு தீமையும், அவதூறும் அணுகாது காத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்புத் தந்தையே இறைவா, திருத்தூதர் பவுல் கூறியதுபோல் நாங்கள் துன்புறுகிறோம் என்றால் அது உங்கள் ஆறுதலுக்காகவும் மீட்புக்காகவும் தான் என்பதற்கிணங்க எங்கள் துன்ப துயரங்களைத் தளராமனதுடன் மனஉறுதியுடன் மீட்பின் பாதையை அடைய எங்களுக்கு வரமருளுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. படைப்பின் பரம்பொருளே இறைவா, உலக மக்கள் அனைவருக்கும் தேவையான போதனைகளைத் தான் இயேசு மலைப்பொழிவில் சொன்னார். எனவே கிறிஸ்தவர்களாகிய நாம் இவற்றை கட்டாயம் பின்பற்றி வாழ்ந்து கிறிஸ்துவை பறைசாற்றிடும் சீடராக வாழ இயேசுவே நீரே எம்மை வழிநடத்தும்படி உம்மை மன்றாடுகிறோம்.

## 12.06.2025 அருளாளர் பிரான்சிஸ் கெசி மற்றும் தோழர்கள் திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் அலெக்ஸ்

நமது திருஅவை அருளாளர் பிரான்சிஸ் கெசியாவையும் அவரது

தோழர்கள், எட்வர்டு, கலிரினிக், ஜாரோக்னியு, சீஜெஸ்லா, ஜோவேய்க், எட்வர்டு கஸ்மியர்ஸ் ஆகியோரையும் சிறப்பிக்க அழைக்கின்றது. அருளாளர் பிரான்சிஸ் கெசி 1920ம் ஆண்டு பெர்லின் நகரில் பிறந்து தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்தபோது, இளையோர் அணி ஒன்றில் இணைந்து மகிழ்வுடன் சேவை புரிந்து வந்தார். தினமும் செபமாலை செபிப்பது, நற்கருணை உட்கொள்வது ஆகிய கோட்பாடுகளில் உறுதியாக இருந்தார். 1939ல் இரண்டாம் உலகப்போர் மூண்டபொழுது சலேசிய இளையோர் மையம், ஜெர்மானிய வீரர்களால் கைப்பற்றப்பட்டு, 1940ல் அருளாளர் பிரான்சிஸ் கெசியும் அவரது தோழர்களும் சிறைப்பிடிக்கப்பட்டனர். சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் அங்கும் தங்களது செபங்களையும், வழிபாட்டுக் கொண்டாட்டங்களையும் விடாது கடைப்பிடித்தனர். முதிர்வடைந்த சிறைவாசிகளிடம் அன்பு கொண்டு அவர்களுக்குச் சேவை செய்தனர்.

1942 ஆகஸ்டு 24அன்று இட்லரின் ஆட்சியில் தேசதுரோகிகளாக குற்றம் சாட்டப்பட்டு வேதசாட்சிகளாக உயிர் துறந்தனர். அவர்கள் இறந்தபோது அவர்களின் வயது 23க்குள், 1999ல் திருத்தந்தை இரண்டாம் ஜான்பால் அவர்களுக்கு அருளாளர் பட்டம் வழங்கினார். இளம் வயதுமுதல் இறைவனிடம் இவர்கள் கொண்ட இறைபக்தியையும், இறைவனுக்காக இன்னுயிர் துறந்த இவர்களின் மனஉறுதியையும் மனதிலிருத்தி இத்திருப்பலியில் இணைவோம், இறைப்பக்திப் பெறுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. திருஅவையின் நாயகனே இறைவா, திருஅவையை வளமுடன் வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் ஆகிய அனைவரும் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி ஏழை எளியோருக்கு நல் உள்ளத்துடன் பணிபுரியும் தராள மனதைத் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பே உருவான இறைவா, அருளாளர் பிரான்சிஸ் கெசி மற்றும் அவரது நான்கு தோழர்களைப் போன்று, நாங்களும் சேவை மனப்பான்மையிலும், ஒற்றுமையிலும், அன்பு செலுத்துவதிலும், துன்பங்களைக் கண்டு களைத்து போகாமலும் "பிறர் அன்பே தலையான பண்பு" என்ற கருத்தும் கொண்டு வாழ அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. வழிநடத்தும் தலைவரே எம் இறைவா, எம் தேசத்தை ஆட்சி செய்துவரும் தலைவர்கள், தேசமக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் சிறந்த திட்டங்களை உருவாக்கி மக்களுக்காக உழைக்க அவர்களுக்கு நல்ல மனதினைத் தந்தருளும்படி உம்மை மன்றாடுகிறோம்.

## 15.06.2025 தூய்மைமிகு மூவொரு கடவுள் பெருவிழா திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

I. நீமொ. 8: 22-31 II. உரோ. 5: 1-5 யோவா. 16: 12-15

இறையேசுவில் பிரிமுள்ள சகோதர சகோதரிகளே, நம் தாயாம் திருஅவை தூய்மைமிகு மூவொரு கடவுள் பெருவிழாவைக் கொண்டாடி மகிழ்கின்றது. இப்பெருவிழா இறைவனின் ஒன்றிப்பை நமக்கு எடுத்துக்காட்டுகின்றது. தானாக இருப்பவர்-தனித்திருப்பவர், அணுகமுடியாத ஒளியில் வாழ்பவர். பெயரிட்டு அழைக்க முடியாதவர் என்றெல்லாம் இஸ்ரயேல் மக்களுக்கு அறிமுகமான இறைவனைத் தந்தை, மகன், தூய ஆவியார் என்ற கூட்டுக் குடும்பமாக இயேசு அறிமுகம் செய்து வைத்தார். உறவில் வாழ்வது ஒன்றே இயேசு அறிமுகம் செய்து வைத்த மூவொரு கடவுளின் இலக்கணம். உறவுகளுக்கு முதன்மையான, முக்கியமான இடம் தரவேண்டுமென்பதே மூவொரு கடவுள் பெருவிழா நமக்குச் சொல்லித்தரும் உன்னதமான பாடம். "உறவே மனிதம், புனிதம், தெய்வீகம்"

புனித அகுஸ்தினார் மூவொரு கடவுளைப்பற்றி நிறைய புத்தகங்கள் எழுதியவருக்கே பெருத்த சந்தேகம். எப்படி மூன்றுபேர் ஓர் ஆளாக செயல்பட முடியும்? என்பதே. ஒருநாள் கடற்கரையில் சிந்தித்துக்கொண்டே நடந்தார். அப்போது ஒரு சிறுபிள்ளை சின்னக்குழியொன்றில் கடல்நீரை அள்ளிக்கொண்டு வந்து நிரப்பிக்கொண்டிருந்தது. இதைப்பார்த்த அகுஸ்தினார் குழந்தாய் என்ன செய்கின்றாய், என கேட்க, இக்கடல் நீரையெல்லாம் இக்குழியில் நிரப்புகின்றேன் என்று கூறியது. இது முடியவே முடியாத காரியம் என்று அகுஸ்தினார் கூறினார். ஆம், உம்மால் மூபொரு இறைவனின் "தன்மையை" புரிந்துக்கொள்ள முடியுமென்றால் இதுவும் சாத்தியமே எனக் கூறி மறைந்துவிட்டது. புனிதரின் மனக்கண்கள் திறக்கப்பட்டன. பின்பு மனம்மாறி தன்னை முழுவதும் மூவொரு இறைவனுக்கு ஒப்புக்கொடுத்தார். தந்தை, மகன், தூய ஆவியார் என முப்பரிமாணங்களில் ஒரே இறைவனாக, ஒருமித்த சிந்தனை, ஒரே வல்லமை, ஒரே செயல் திறனோடு தொடக்கமும், முடிவுமில்லாமல் இயங்கி, அனைவருக்கும் மீட்பை உறுதி செய்கின்றனர். "மானுட தோழமையில் ஒன்றிப்பே மூவொரு இறைவன் காட்டும் முன்மாதிரி" என்ற ஒருமித்த மனத்துடன் இன்றைய திருப்பலியில் பக்தியுடன் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, திருஅவையின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள எம் திருத்தந்தையை ஆசீர்வதியும். அவருக்குத் தேவையான உடல்உள்ள நலமளித்து, எடுக்கின்ற முடிவுகளில் தெளிவையும், புரிதலையும் உணர்ந்து, மக்களின்

எதிர்காலத்திற்குத் தேவையான அனைத்து அருள்வரங்களையும் இறைவனிடமிருந்து பெற்று மக்களை வழிநடத்திடத் தேவையான உமதருளாசீரை நிறைவாகப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. மூவொரு இறைவா, நீர் நல்லதென்று படைக்கப்பட்ட அனைத்துமே உமக்கெதிராக செயல்படுகின்ற இக்காலக் கட்டத்தில் வாழும் நாங்கள் அனைவரையும் உமது படைப்பின் மகிமையை உணர்ந்து எங்களையே நாங்கள் உமது பாதையில் வழிநடந்திட தேவையான அருள்வரங்களைப்பொழிந்து வழிநடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. துன்பத்தில் துணைநிற்பவரே, வாழ்வில் ஏற்படும் துன்பங்கள், சோதனைகள், வேதனைகள், பிரச்சனைகள் போன்றவற்றிலிருந்து எங்களை முழுமையாக உம்மிடம் சமர்ப்பித்து அவற்றிலிருந்து நாங்கள் விடுதலைப்பெற வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

4. யாருமற்ற அனாதைகள், தனிமையில் தவிப்போர், நோயினால் துன்புறுவோர் அனைவரையும் உமது பதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்களின் தேவைகளை, உணர்வுகளை நீர் ஒருவரே அறிவீர் ஆண்டவரே. நீர் அவர்களோடிருந்து அவர்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டுமென்று உம்மை கெஞ்சி மன்றாடுகிறோம்.

## 21.06.2025 புனித அலோசியஸ் கொன்சாலா கார்சியா திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிசம்பந்தன்

இன்றைய தினம் புனித கொன்சாகா ஞானப்பிரகாசியாரை நினைவு கூர்ந்து சிறப்பிப்போம். புனித கொன்சாகா ஞானப்பிரகாசியார் இத்தாலிய அரச குடும்பத்தை சேர்ந்தவர். தாயின் உதிரத்தில் இருக்கும் போதே ஞானஸ்நானம் பெற்றவர். ஒன்பதாவது வயதில் மாதாவின் பீடத்தின்முன் நின்று தனது கன்னிமையை கடவுளுக்கு அர்ப்பணித்தவர். 11வது வயதில் புதுநன்மை பெற்றார். இவரது பெற்றோருக்கு இவரது ஆன்மீக வளர்ச்சியில் விருப்பம் இல்லை. அவரை அரண்மனையின் சுகபோகங்களுக்கு அடிமையாக்க விரும்பினார்கள். ஆனாலும் இவர் அதற்கெல்லாம் இடங்கொடாமல் தனக்குரிய சொத்தையெல்லாம் தம்பி "ரொடல்போ"விற்கு விட்டுக் கொடுத்து விட்டு இயேசு சபையில் சேர்ந்தார். சிறுவயது முதலே சிறுநீரக கோளாரில் அவதிப்பட்ட நமது புனிதர் அதை பொருட்படுத்தாமல் ப்ளேக் நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு சேவை புரிந்தார். தினம் ஒருமணி நேரமோ அல்லது சமயத்தில் 5மணி நேரமோ தியானம் செய்வார். அவரது தியானத்தில் கபிரியேல் தூதர் அவருடன் உரையாடிக்கொண்டிருப்பார். இவரது நோக்கம் தேவசித்தத்திற்கும் பெரியவர்களுக்கும் கீழ்ப்படிந்து நடப்பதுமேயாகும். தனது 25வயதில் புனித ராபர்ட் பெல்லார்மின் அருகே இருக்க இயேசுவின்

பெயரை சொல்லிக் கொண்டே உயிர்த்துறந்தார். இன்றைய வாசகங்களும் புனித ஞானப்பிரகாசியாரின் வாழ்வை பற்றியே அமைந்துள்ளன. அர்ப்பண உணர்வோடும் ஆனந்த மனதோடும் சேவை புரிபவர் கடவுளின் அன்புக்குரியவர். அரச போகங்களை துறந்து இளம் வயதிலேயே ஞானம் பெற்று ஒளிவீசிய புனித ஞானப்பிரகாசியார் போன்று இறை சித்தத்திற்கு தம்மை அர்ப்பணித்து இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பு தந்தையே இறைவா, உமது வழித்தோன்றலான புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திருத்தந்தையின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் அவரை பின்பற்றி தமது கடமைகளை தூய ஆவியின் அருட்கொடைகளால் செயலாற்ற வேண்டிய வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
2. வாழ்வளிக்கும் வள்ளலே இறைவா, இயற்கையின் சீற்றத்தால் சுட்டெரிக்கும் சூரியனின் வெப்பக்கதிர் தாங்க இயலாமல் தவிக்கும் இக்கால கட்டத்தில் நல்லதொரு மழையினை பொழியச் செய்து பூமியையும் மக்களையும் குளிரச் செய்து வரண்டு கிடக்கும் வயல்வெளிகள் பசுமை பெற வேண்டுமென்றும் விவசாயிகளின் வாழ்வு வளர்ச்சிபெற வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. நலமளிக்கும் இறைவா, வளர்ந்து வரும் நாகரீக உலகின் அவசர போக்குகளினால் சீரழிந்து கொண்டிருக்கும் எங்கள் இளம் சமுதாயத்தினை உமக்கு சமர்பிக்கின்றோம். அவர்களின் வாழ்வை நேர்மையான பாதையில் நடத்திடவும், தங்களின் படிப்பிற்கேற்ற வேலைக்கிடத்து நல்வழியில் நலமுடன் வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 22.06.2025 இயேசுவின் திருவுடல் திருஇரத்தம் பெருவிழா திருப்பலி

**முன்னுரை** திருமதி. மாலா செபமாலை

I. தொநூ. 14: 18-20 II. 1கொரி. 11: 23-26 லூக். 9: 11-17

இறையன்பில் நாளும் வாழும் இறைச்சமூகமே, இறைமக்களாகிய உங்களுக்கு நம் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்தம் பெருவிழாவைச் சிறப்பித்துக் கொண்டாடுகிறோம். பாஸ்கா என்னும் புளிப்பற்ற அப்பாவிழாவன்று சீடர்களுடன் இறைமகன் இயேசு பாஸ்கா விருந்துண்ண பந்தியில் அமர்ந்து அப்பத்தை எடுத்து நன்றி செலுத்தி அதைப்பிட்டு அவர்களுக்குக் கொடுத்து "இது உங்களுக்காகக் கொடுக்கப்படும் என் உடல்" இதை என் நினைவாகச் செய்யுங்கள் என்றார். கிண்ணத்தையும் எடுத்து இந்த கிண்ணம் உங்களுக்காகச் சிந்தப்படுகின்ற எனது இரத்தத்தை நினைவுப்படுத்தப்படும் உடன்படிக்கையின் இரத்தம். உலகோரின் பாவமன்னிப்புக்காகச் சிந்தப்படும் என் இரத்தம் என்று

சொன்ன அந்நாள்தான் குருத்துவத்தை ஏற்படுத்திய பொன்னாளான இத்திருவிருந்தில் பங்கேற்காத எவரும் மறுவாழ்வு என்னும் விண்ணுலகில் பங்கேற்க இயலாது. இந்நாள் பணிவிடைக்கும் குருத்துவத்திற்கும் நற்கருணைக்கும் பிறந்த நாள். நான் உங்கள் நடுவே பணியாற்றுபவனாக இருக்கின்றேன் என்ற இயேசு கிறிஸ்து பணிவிடை பண்புக்கும் பலமூட்டவே இயேசு குருத்துவத்தை ஏற்படுத்தினார். குருத்துவம் இல்லையேல் திருஇரத்தம் நம் திருவுடலும் (நற்கருணை) இல்லை.

நற்கருணையும் திருஇரத்தத்தின் வழியாக இயேசு கிறிஸ்து கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் அனைவருடனும் தான் உடனிருப்பதை உறுதிப்படுத்தி மானுடம் பரிவிலும், பகிர்விலும், பணிவிலும் பணியிலும் பாசத்திலும் பரிணமிக்க வழியை ஏற்படுத்திய மிக அற்புதமான ஆற்றல்வாய்ந்த திருவுடல், திருஇரத்தம் பெருவிழாவை இன்று நாம் கொண்டாடுகிறோம். இயேசுவின் உடலை பலவிதமான இன்னல்களுக்குட்படுத்தப்பட்டதால், புனித இரத்தமும், சிதைந்த திருவுடலும் உலகோரின் துயர்துடைத்து நோய்களைக் குணப்படுத்தி, வலிமைத்தந்து அமைதியற்ற உள்ளங்களுக்கு அமைதி தந்து இவ்வுலகில் அனைவரையும் வாழவைத்து அவரிலே அனைவரும் ஒன்றாக இணைந்து தூய்மையான வாழ்வு வாழ வரம்வேண்டி இத்தெய்வீகத் திருப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. விலைமதிப்பில்லா இயேசுவின் திருஇரத்தமே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் அனைவரையும் உமது இரத்ததால் கழுவி பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. நாட்டையாளும் தலைவர்கள் மதம், மொழி, ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடுகளைக் களைந்து உயிருள்ள மனிதர்கள் என்னும் எண்ணத்துடன் சேவையாற்ற வேண்டுமென்றும் மக்களின் நலனில் முழு நம்பிக்கையோடு ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து செயல்பட வேண்டிய ஆற்றலையும் எண்ணத்தையும் அளித்தருள உம்மை மன்றாடுகிறோம்.

3. மூன்று ஆணிகளால் அறையப்பட்டு, சதையும், இரத்தமும் வழிந்தோட தம்மையே தியாகமாக நீர் எமக்களித்தவரே, நாங்கள் செய்த பாவங்கள், குற்றங்கள், குறைகளுக்காக நீர் சிந்திய கண்ணீர்த் துளிகள் அனைத்தையும் நாங்களும் எங்களின் வாழ்வில் ஏற்படுகின்ற அனைத்துவிதமான துன்பங்களையும் நாங்கள் நீர் சுமக்காமல் அதற்கான பழிகளை நாங்கள் சுமக்க போதுமான உடல்பலத்தையும், மனபலத்தையும் தந்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 23.06.2025 புனித ஜோசப் கபாசோ திருப்பலி

**முன்னுரை** திருமதி. பத்மாவதி

இறையேசுவில் பிரியமுள்ளவர்களே, புனித ஜோசப் கபாஸோ இத்தாலி நாட்டில் கஸ்தெல்நோவோ என்னும் கிராமத்தில் 1811ம் ஆண்டில் பிறந்தார். அவர் கியேரி என்ற இடத்தில் பள்ளிப் படிப்பையும், குருமடப் பயிற்சியையும் பெற்றார். அவரது குருப்பட்டத்திற்குப்பின் தூரின் மாநகரிலுள்ள "கன்வித்தோ எக்ளெசியாஸ்டிக்கோ" என்ற குருமடத்தில் அறநெறி இறையியல் படிப்பைப் படித்தார். அப்போது இளைஞர்களுக்கும் சிறையிலிருப்போருக்கும் மறைக்கல்வியைக் கற்றுக் கொடுத்து, அவர்களை நல்வழிப்படுத்தும் பணியை மேற்கொண்டார். பிறகு தான் படித்த "கன்வித்தோ" என்ற குருமடத்திற்கு அதிபரானார்.

புனித பிரான்சிஸ்கு சலேசியார் மற்றும் புனித அல்போன்ஸ் ஆகியோரின் போதனையால் அதிகம் கவரப்பட்டார். கடமையுணர்வு, சேவை மனப்பான்மை, செபவாழ்வு, இறைவனிடம் தன்னையே கையளிப்பது போன்ற விழுமியங்களால் தூண்டப்பெறுபவர் புனிதத்தை அடையலாம் என்று எடுத்துரைத்தார். சிறையிலிருப்போரைக் காணச்செல்லும்போது அங்கே மரணத்தண்டனைப் பெற்ற கைதிகளுக்கு கிறிஸ்துவ நம்பிக்கையையும் இறைவனின் இரக்கத்தையும் பற்றி எடுத்துச் சொல்லி அவர்களை உறுதிப்படுத்தினார். "சிறைக்கைதிகளின் குருவும், இத்தாலிய குருக்களின் ஒளியாகவும்" திகழ்ந்த தந்தை க/பாஸோ 1860ம் ஆண்டு ஜூன் 23ம் தேதி விண்ணக வாழ்வை அடைந்தார். திருத்தந்தை 12ம் பத்திநாதர் இவருக்கு 1925ம் ஆண்டு அருளாளர் பட்டமும் 1947ம் ஆண்டு புனிதர் பட்டமும் கொடுத்து இவரை "சிறைக்கைதிகளின் பாதுகாவலர்" என்று அறிவித்தார். இச்சிந்தனைகளை மனதில் நிறுத்தி இறையருள் பெறவேண்டி இத்திருப்பலியில் பக்தியோடு மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. திருத்தந்தைக்காக மன்றாடுவோம்: இறைப்பணிக்காக தன்னையே அர்ப்பணித்திருக்கும் எம் திருத்தந்தையை ஆசீர்வதியும். அவருக்குப் போதுமான நல்ல உடல் உள்ள நலமளித்து, எடுக்கின்ற ஒவ்வொரு முடிவையும் தூய ஆவியின் அருட்கொடைகளால் நிரப்பி, மக்களின் எதிர்காலத்திற்குத் தேவையான திட்டங்களை நன்முறையில் செயல்படுத்த தேவையான அனைத்து அருள்வரங்களையும் அளித்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. நாட்டு தலைவர்களுக்காக: அன்பு இறைவா, உலக மக்களிடையே பகைமை உணர்வு, பழிவாங்கும் எண்ணம், கலவரம், கொலை, கொள்ளை, பாலியல் பலாத்காரம் போன்ற தீய எண்ணங்கள் மறைந்து, ஒற்றுமை, சமாதானம், மன்னிக்கும் மனம் போன்ற நற்குணங்களை

அளித்து ஒரே நாடு ஒரே இனம் என்ற எண்ணம் உலகிலும், நாட்டிலும் நிலவ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. முதியோருக்காக: தனிமையினாலும், நோயினாலும் வாடிடும் வறியோர், முதியோர் அனைவருக்கும் மக்கள் மனிதநேயத்துடனும் அன்புடனும் ஆதரவளித்து, தங்களின் பெற்றோர், உற்றார் உறவினரை நல்லமுறையில் பேணிக்காக்க வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 24.06.2025 புனித திருமுழுக்கு யோவான் பிறப்பு பெருவிழா திருப்பலி

**முன்னுரை** திரு. DVR. ராஜா

I. எசா. 49: 1-6 II. திபா 13: 22-26 லூக். 1: 57-66,80

1572ம் ஆண்டு கிறிஸ்தவர்களை வெற்றி கொள்வதற்காக இஸ்லாமிய துருக்கியப்படை போர் முரசு கொட்டியது. அன்றைய திருத்தந்தையான 5ம் பத்திநாதர், கிறிஸ்துவ வீரர்கள் அனைவரும் நம்பிக்கையுடன் செபிக்கும்படி கேட்டுக்கொண்டார். லெபாண்டோ எனுமிடத்தில் கிறிஸ்தவர்களை எதிர்த்த துருக்கியர் படுதோல்வியடைந்தது. மரியா கிறிஸ்தவர்களின் சகாயம் என நாடு முழுவதும் போற்றிப்புகழப்பட்டார். வரலாற்றுப் பக்கங்களில் மாவீரன் நெப்போலியன் என்று குறிக்கப்பட்டவன் தாம் பின்பற்றும் கிறிஸ்துவ மதத்திற்கே துரோகம் செய்தான். அவன் செய்த மிகப்பெரிய தவறு 1808ம் ஆண்டு கத்தோலிக்கத் திருஅவையின் தலைவர் 7ம் பத்திநாதரை சிறையிலடைத்தான். ஆயினும் நெப்போலியனின் ஆணவம், அகங்காரம் லெய்ப்ஸிங்க் என்னுமிடத்தில் நடந்த போரில் படுதோல்வியடையச் செய்தது. அதன் விளைவாக திருத்தந்தை 7ம் பத்திநாதர் சிறை வாழ்க்கையிலிருந்து விடுதலைப் பெற்றார். கத்தோலிக்க மக்கள் அன்னை மரியாமீது பக்தி கொண்டு செபித்ததின் விளைவே திருத்தந்தையின் விடுதலையாகும். இவ்விடுதலை ஆண்டினை நினைவு கூறவே திருத்தந்தை "கிறிஸ்தவர்களின் சகாயமாதா" எனும் பெயரில் விழாவினை ஏற்படுத்தினார். எனவே நாமும் அன்னையின் மக்களாக நம்பிக்கையுள்ளவர்களாக வாழ இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. விண்ணகத் தந்தையே இறைவா, திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவியர், வேதியர், பொதுநிலையினர் அனைவரும் உமது இறையரசை கட்டியெழுப்பும் பணியில் நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு, தியாகம், மன்னிப்புப் போன்ற மேலான பண்புகளை கட்டிக்காத்து, இறையரசின் சாட்சிகளாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
2. நலமளிக்கும் நல்லாயனே எம் இறைவா, உம் அன்னையை எங்களுக்கு கொடையாகக் கொடுத்தீரே, அவரின் வாழ்வை

எம் தாய்மார்கள் அனைவருக்கும் கடைப்பிடித்து தங்களின் பிள்ளைகளை இறைபக்தியிலும், கீழ்ப்படிதலிலும் வளர்த்தெடுக்கும் நல் அன்னையர்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. நளிந்தோரை வலுவாக்குபவரே, அதிகாரத்தினால் உலகில் வாழ வழியின்றி ஒடுக்கப்பட்டு, நசுக்கப்பட்டு, உரிமையற்று, நோய் நொடியில் வலுவிழந்து கொண்டிருக்கும் மக்களை தேற்றி, வாழ்வில் அனைத்து நலன்களும் பெற்று வாழ உம்மை மன்றாடுகின்றோம்.

## 27.06.2025 இயேசுவின் தூய்மைமிகு இதயம் பெருவிழா திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிவில்சன்

I. எசே. 34: 11-16 II. உரோ. 5: 5-11 லூக். 15: 3-7

இறை இயேசுவின் உயிர்ப்பு பெருவிழாவிற்கு தயாரிக்கும் முன்பும் பின்பும் ஒன்றை கவனித்தோமா என தெரியவில்லை. உயிர்ப்பு என்பது யாது? எங்குள்ளது? யாரிடம் உள்ளது? அதற்குத்தான் இன்றைய இரு வாசகங்களும் நற்செய்தி இறை வார்த்தைகளும் நமக்கு நல்ல புரிதலையும் தெளிவையும் தருகிறது. ஒவ்வொரு சொல்லிற்கும் செயலிற்கும் உயிர்ப்பு தேவை. குழப்பமான சூழல் ஏற்படும்போது இந்த உயிர்ப்பு உணர்வுகளுக்கு மதிப்பளித்து செயல்படாமல் எப்படி எங்கு சென்று எதனைக் கொண்டு இயங்க வேண்டும் என வழிமுறைகள் அறிந்து செயல்பட வேண்டும். இப்படித்தான் திருத்தூதர்கள் செயல்பட்டனர் என்று இறை இயேசுவும் குறிப்பிடுகின்றார்.

எனது வார்த்தைகள் அல்ல, எனது தந்தையினுடையது, இன்றுள்ள சூழல் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல் உணர்ச்சிகளுக்கு அடிமையாகி நமக்கு நாமே பல துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் ஆளாகி வருத்திக் கொள்கிறோம். 01. அறியாமல் புரியாமல் இருப்போருக்கு (துணையாளர் கற்றுத் தருவார்) 02. பயத்தில் மறந்து விடுவோர்க்கு (நினைவூட்டுவார்) 03. கலக்கம் அடைவோர்க்கு (ஆறுதலளிப்பார்) 04. பயத்தில் தடுமாறுவோரை (தேற்றிடுவார்). இந்த நான்கு உணர்வுகளைப் புறந்தள்ளி நம்மை வழிநடத்துபவர் கதிரவனோ, நிலவோ அல்ல. மாறாக, இறைஒளியே நம்மை வழி நடத்தும். இறை இயேசு தன் அமைதியைத் தருகிறேன் என்கிறார். இது தந்தை, மகன், தூய ஆவியாரின் ஒருங்கிணைந்த ஒளி உடனிருப்பு நம்மோடு பயணிப்பது. ஆகவே தேவை ஏற்படும்போது இன்றைய சிந்தனைகளோடு செயல்பட்டு அமைதியின் இருப்பிடமாக பயணிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்புத் தந்தையே, உம் திருஅவையின் திருப்பணியாளர்களான, திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள் இருபால் துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் இயேசுவின் நற்செய்தி போதனைகளை மனதில் நிறுத்தி கடமை உணர்வோடு செயல்படத்

தேவையான ஆற்றலை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. தூய்மையின் இறைவா, இவ்வுலக கலாசாரத்தில் நமக்கு பலவிதமான இடர்பாடுகள் ஏற்படுகின்றன. அவற்றை இவற்றிற்கு காரணம், என்ன? இவற்றை எவ்வாறு சரிசெய்வது என்பதற்கான வழிகளைத் தெரிந்து செயல்பட உயிர்த்த ஆண்டவர் நம்மை வழிநடத்தியருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. தியாகத்தின் ஊற்றே எம் இறைவா, குடும்ப உறவுகளில் சுயநலம், புரிந்துக்கொள்ளாமை, விட்டுக்கொடுக்காமை பலவிதமான பிரச்சனைகள் நிலவிவரும் இக்காலத்தில் நீரே இவர்களோடிருந்து இவர்களின் வாழ்விற்குத் தேவையான பாதையை வழிநடத்தி ஆசீரவதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. வாழ்வில் தடுமாறுவோருக்கு உற்றத் துணையாக இருப்பவரே, உலகிலும், குடும்பங்களிலும் பலவிதமான பிரச்சனைகளும், சோதனைகளும், வேதனைகளும் எங்களை ஆட்கொண்டு வாழ்வில் நிலைத்தடுமாறி விழுகின்ற நேரங்களில் நீரே உடனிருந்து பாதுகாத்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 28.06.2025 கன்னிமரியாவின் மாசற்ற இதயம் திருப்பலி

**முன்னுரை**

திரு. சாம்சன்

இறையேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, மரியாளின் மாசற்ற இதயம் என்பது அன்னையின் வாழ்க்கை, மகிழ்ச்சி, துக்கங்கள், நற்பண்புகள் மற்றும் பரிபூரணங்கள் அன்னையின் கன்னித்தன்மை, இயேசுவின்மீது கொண்டுள்ள அன்பு ஆகியவற்றைக் குறிக்கும். அன்னை மரியாவின் இதயம் அஞ்சலி செலுத்தும் விதமாக சிவப்பு அல்லது வெள்ளை நிறத்தில் இதயத்தைச் சுற்றி மூடப்பட்டிருக்கும். இது ஏழு வாள்கள் அல்லது காயங்களால் துளைக்கப்பட்டதாக மாசற்ற இதயம் சித்தரிக்கப்படுகிறது. கி.பி. 1830ம் ஆண்டு கேத்தரின் லேபூரேவுக்கு மரியாள் காட்சியளித்ததைத் தொடர்ந்து கன்னிமரியின் மாசற்ற இருதயத்தின்மீதான பக்தி குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பெற்றது. முதல் சனிக்கிழமை மரியாளின் மாசற்ற இதயத்திற்கு பரிகாரம் செய்யும் நாளாக கொண்டாடப்படுகிறது. இந்த நன்னாளிலே நம் மனதில் இருக்கும் தீய எண்ணங்கள் மற்றும் தேவையற்ற அழுக்குகளை நீக்க இறைவன் நமக்கு தரும் வாய்ப்பு என்னவென்றால் இதயம் நமது உடலிலுள்ள இரத்தத்தை சுத்திகரிப்பதுபோல நாமும் நமது இதயத்தை தூய்மைப்படுத்தி வாழவேண்டும்.

நாம் ஜென்மப்பாவமின்றி பிறப்பில் மாசற்றவராகவும் கடவுளுக்கு உண்மையுள்ளவர்களாகவும் இதோ உமது அடிமை என்ற உறுதிப்பாட்டை இறுதிவரை கடைப்பிடிப்பதாகவும் வாழ்ந்தவர் நம் அன்னை மரியாள்.

மீட்பர் இயேசுவை உலகிற்கு கொடுத்த உத்தம இதயத்தை கொண்டவர். தனது வாழ்வை பாவத்தால் கறைப்படுத்தாதவர் என்ற பெருமைக்குரியவள் அன்னை மரியாள். 1944ம் ஆண்டு திருத்தந்தை பன்னிரெண்டாம் பயஸ் அன்னையின் மாசற்ற திரு இருதய விழாவை உலகம் முழுவதும் கொண்டாடும்படியாக அறிமுகப்படுத்தினார். மீட்பின் வரலாற்றில் மிகப்பெரும் பங்காற்றுவதற்கு தனது வாழ்வையே தியாகம் செய்தவள்தான் அன்னை மரியாள். இத்தகைய தூய்மையான அன்பு மாசற்ற இதயம் நம்மை அவளது பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டு நமக்காகப் பரிந்துப்பேசி ஜெபிக்கும் அன்னையிடம் நம்மை முழுவதுமாக ஒப்புக்கொடுத்து செபிப்போம். அன்னையின் வாழ்வை முன்மாதிரியாகக் கொண்டு வாழும் தியாகத்தை நாமும் பெறவும் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. கருணையின் தெய்வமே இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் அனைவரையும் ஆசீர்வதித்து அவர்களுக்கு ஏற்படும் எல்லா இடர்களிலிருந்தும் காப்பாற்றி நல்ல உடல்உள்ள சுகமளித்து திருஅவையை நன்முறையில் வழிநடத்தத் தேவையான அருளைப்பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. வழிகாட்டும் ஒளியே எம் இறைவா, நாட்டையாளும் தலைவர்கள் மக்கள் நலனில் அக்கறைக்கொண்டு பிற நாடுகளுடன் பகையுணர்வு, சண்டைச்சச்சரவு நீங்கி ஒற்றுமையுடனும் அமைதியுடனும் மக்களின் வாழ்வாதாரம் சிறக்க எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றிப்பெற்று செயல்படுத்த நீர் உமது அருள்வரங்களைப்பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. படைப்பின் பரம்பொருளே எம் இறைவா, இறைமகன் இயேசுவை ஏற்றுக்கொண்ட மக்கள் அன்னை மரியாளை ஏற்க தயக்கம் காட்டுகிறார்கள். வணக்கத்திற்குரிய அன்னையை அன்போடு ஏற்றுக்கொண்டு தங்கள் வாழ்க்கையில் வரும் எல்லா பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கான வழியையும் நம்பிக்கையையும் கொண்டு வாழ்வில் அனைத்து நலன்களையும் பெற்று வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 29.06.2025 பேதுரு, பவுல் திருத்தூதர்கள் பெருவிழா திருப்பலி

**முன்னுரை** திருமதி. லதா சுரேஷ்

I. திப. 12: 1-11 II. 2திமொ. 4: 6-8.17-18 லூக். 16: 13-19

இறையேசுவின் பிரியமான சகோதர சகோதரிகளே, நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை அறிந்துக்கொண்டால் நமக்கு விடுதலை உண்டு என்பதை இன்றைய வாசகங்கள் நமக்கு

உணர்த்துகின்றது. இவ்வுலகில் பேராசை, பொன்னாசை, பெண்ஆசை, மண்ணாசையினால் நாம் பல நன்மைகளை இழந்தவர்களாய் இறையரசை விட்டுவிலகி மாயச்சிறையில் அடைப்பட்டு வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். இச்சிறையிலிருந்து நம்மை மீட்க இறைமகனே மனிதரானார். நம்மைச்சுற்றி கட்டப்பட்ட உலக ஆசைகள் என்னும் சங்கிலிகளை உடைத்தெறிந்து அழிந்துபோகும் மண்ணுலக வாழ்வை விட்டு நிறைவான விண்ணக வீட்டிறகு உரிமைப்பேறு பெற்றவர்களாய் தன் பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டார். அப்பா தந்தையே என அழைக்கும் மாபெரும் பேற்றினை நமக்கு அளித்துள்ளார். நாம் பெற்ற இந்த உரிமை வாழ்வை நிலையான பேரின்பத்தை நாம் மட்டும் உணர்ந்தால் போதாது. இனிவரும் வருங்கால சந்ததியினருக்கும், பிற இனத்தனவருக்கும் உணர்த்த வேண்டும், உணர வேண்டும்.

இறைவார்த்தையை நம்பிக்கை வாழ்வாக வாழ்ந்துக் காட்டிட வேண்டும். இறைவனின் இரக்கத்தினால் மட்டுமே நம் பாவங்களிலிருந்து மீட்பு உண்டு என்பதை அனைவரும் அறியச் செய்ய வேண்டும். அன்று பேதுரு ஒருவரே இயேசு "மெசியா, வாழும் கடவுளின் மகன்" என்பதை உணர்ந்தார், அறிக்கையிட்டார். அதன் பரிசாக திருஅவையின் தலைவரானார். விண்ணரசின் திறவுக்கோலை பெறும் பேறுபெற்றார். இறையரசுக்குள் நுழைய இறைவனின் கரம்பிடித்து அவர்வழி சென்றால் நிச்சயம் நமக்கு மீட்பு உண்டு என்பதை உணர்ந்தவர்களாய் இத்திருப்பலியின் வழியாக நம் வாழ்வில் விடுதலைநாயகன் வெற்றியின் வேந்தனை நம் இல்லங்களிலும், உள்ளங்களிலும் குடிக்கொள்ள பக்தியோடு பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்புத் தந்தையே இறைவா, உம்மால் தேர்வு செய்யப்பட்டுள்ள திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர் மற்றும் இருபால் துறவறத்தார் அனைவரும் தங்களின் வாழ்வின் மகத்துவத்தை உணர்ந்து, உள்ளத்தையும், ஆன்மாவையும் இறைப்பதம் சமர்ப்பித்து வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பின் ஊற்றே எம் இறைவா, இன்று உலகில் மதத்தின் பெயரால், நிறத்தின் பெயரால், கொடுமைகள், வன்முறைகள், போர், கலவரம், குடும்பங்களில் ஒற்றுமை, சமாதானமின்மை, பாலியல் வன்கொடுமை, பணத்தாசை போன்றவை தலைவிரித்தாடுகின்ற நிலைமாறி ஒரே மனநிலையோடு அன்பு செய்து வாழும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. விடுதலையின் விடிவெள்ளியே, மனிதனின் அறிவியல் வளர்ச்சியின் காரணமாய் இயற்கைக்கு அப்பாற்பட்ட மரபணுமாற்றங்கள் செய்யப்பட்டு புதிய கண்டுப்பிடிப்புகள் பெருகிவருகிறது. இவை யாவும் மனித இனத்தின் வளர்ச்சிக்குப் பயனுள்ளதாக

அமைந்திடவும், உயிரனங்களுக்கு எவ்வித இடையூறுகளும் நேராமல், இயற்கைவளங்கள் செழித்தோங்கி வாழ்வில் வளமையோடு வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

4. உலகின் ஒளியான எம் இறைவா, எம் பங்கிலுள்ள ஒவ்வொரு இளையோரையும் நீர் ஆசிர்வதியும். பள்ளி, கல்லூரிப் படிப்பை முடித்து, மேல்படிப்பிற்கும், வேலைக்கும் தேடிவோருக்கு வேலைவாய்ப்பையும், படிக்கின்ற பிள்ளைகளுக்கு நல்ல கல்வியறிவையும், ஒழுக்கத்தையும், தெய்வபயத்தையும் அளித்து பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## பகுதி 2: நம்பிக்கையில் வளர...

## அருளாளர் பிரான்சிஸ் கெசி மற்றும் தோழர்கள் பற்றிய வரலாறு

திரு. ஜான் அலெக்ஸ்

அருளாளர் பிரான்சிஸ் கெசி மற்றும் அவரது 4 நண்பர்களை பற்றி இம்மாதத்தில் நினைவுக் கூர்வோம். இறை நம்பிக்கையை வாழ்வதில் ஒருவருக்கொருவர் எவ்வாறு ஆதரவளித்தார்கள், மாற்றத்தை ஏற்படுத்த ஒன்றாக பணி செய்தார்கள் என்பதை பார்க்கின்றபோது நமக்கு வியப்பாக இருக்கும். ஆகவேதான் அவர்கள் கத்தோலிக்க பதின்ம வயதினருக்கு மிக சிறந்த முன்மாதிரியாக இருக்கிறார்கள். சவால் மற்றும் வெற்றியில், குழு அடிப்படையிலான செயல்பாடுகள் மற்றும் நமது நம்பிக்கையைப் பற்றி ஒன்றாக புரிந்துகொள்வது சிறப்பான அம்சங்களில் ஒன்றாகும். கடினமான தருணங்களில் கூட, பிரான்சிஸும் அவரது நண்பர்களும் ஒருவருக்கொருவர் நன்கு புரிந்தவர்களாக இருந்தனர். இரண்டாம் உலகப் போரின் துவக்கத்தில், 1939ல் ஹிட்லர் போலந்துமீது படையெடுத்தார். போஸ்னானில் உள்ள சலேசிய இளைஞர் மன்றம் ஆக்கிரமிக்கப்பட்டு, ஜெர்மானிய வீரர்களின் முகாம்களாக மாற்றப்பட்டது. அங்கு தங்கியிருந்த இளையோர் நகரத்திற்கு வெளியே உள்ள காட்டு பகுதிகளிலும் தோட்டங்களிலும் ஒன்று கூடும் நிலை இருந்து வந்தது.

1940ல் பிரான்சிஸ் கெசி மற்றும் அவரது இளையோர் மன்ற 4 நண்பர்களும் கைது செய்யப்பட்டு சட்டவிரோத மத அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டனர். அவர்கள் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டனர். இதைத் தொடர்ந்து அவர்கள் பல்வேறு சிறைகளுக்கு மாற்றப்பட்டனர். இருந்த போதிலும் பிரான்சிஸ் மற்றும் அவரது நண்பர்கள் எப்போதும் ஒன்றாகவே இருந்தனர். இது அதிக நாட்கள் நீடிக்க வாய்ப்பில்லாமல் போனது. சிறையில் அவர்கள் தொடர்ந்து செபித்தனர். செபமாலை, சகாய அன்னைக்கு நவநாட்கள், காலை மற்றும் மாலை மன்றாட்டுமாலைகள் என பக்தியோடு நாட்களை கழித்தனர். வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் சிறையில் அவர்கள் தங்கள் அறையில் திருவழிபாட்டு விழாக்களையும்

கொண்டாடினர். அவர்களது இறை பற்றும் நம்பிக்கையும் என்றும் தளரவில்லை. இறுதிவரை நம்பகமான திருத்தூதுவ வாழ்வின் சாட்களாக இருந்தனர். அவ்வப்போது அவர்கள் ரகசியமாக அனுப்பும் செய்திகள் வழியாக தங்கள் குடும்பத்தினருடன் தொடர்பில் இருக்க முயன்றனர். மீண்டும் போஸ்னானுக்கு அவர்கள் அனுப்பப்பட்டு, தேசத்துரோக வழக்கில் குற்றம்சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டு ஆகஸ்ட் 24ம் நாள் 1942ல் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. ஜூன் 6, 1999ல் அப்போதைய திருத்தந்தை 2ம் ஜான் பால் அவர்களால் திருஅவையில் அருளாளர் நிலைக்கு இந்த ஐந்து சலேசிய மாணவர்கள் உயர்த்தப்பட்டனர். இவர்கள் தங்கள் வாழ்வில் முன்மாதிரி காட்டி கடைபிடித்த பண்புகள்:

**பிரான்சிஸ் கெசி :** 1920ல் பிறந்த இவர், ஆக்கிரமிப்பின் போது அவருக்கு ஒரு தொழிற்சாலையில் வேலை கிடைத்தது. தனது ஓய்வு நேரத்தை சலேசிய இளையோர் மன்றத்தில் செலவிட்டு, அதன் செயல்பாடுகளை வழிநடத்தினார். பிறருக்கு உதவ எப்போதும் தயாராக இருந்தார். தினமும் செபமாலை, திருப்பலியில் நற்கருணை பெறுதல் என இறை பராமரிப்பில் தளரா நம்பிக்கை வைத்திருந்தார். இறக்கும்போது அவருக்கு வயது 22.

**எட்வட் க்ளினிக் :** 1919ல் பிறந்தவர். பயந்த சுபாவம் ஆனால் இளையோர் மன்றத்திற்கு வந்தவுடன் மிகவும் கலகலப்பானவராக மாறினார். மிகச்சிறந்த பொறுப்பான மாணவரான இவர் இறக்கும்போது வயது 23.

**ஜரோக்னிவ் வோஜ்சிச்சோவ்ஸ்கி :** 1922ல் பிறந்தவர். சிறந்த தொலை நோக்கு சிந்தனையுள்ளவர். எதையும் எளிதில் புரிந்துகொள்ள முயற்சிப்பதற்காக விஷயங்களைப் பற்றிய ஒட்டுமொத்த பார்வையைப் பெற முயற்சிப்பார். சிறந்த வழிகாட்டியாக தலைவராக இருந்தார். தனக்கே உரித்தான நகைச்சுவை உணர்வுக்காக பெரிதும் போற்றப்பட்டவர். இறக்கும்போது அவருக்கு வயது 20.

**செஸ்லாவ் ஜோஸ்வியாக் :** 1919ல் பிறந்தவர். சற்று சூடான குணம் கொண்டவரானாலும், தனிப்பட்ட சிந்தனை கொண்டு செயல்படுவார். ஆற்றல் நிறைந்தவர், எந்த தியாகத்தையும் ஏற்க தயாராக இருப்பவர். நேர்மறையான வாழ்வுமுறையை கொண்டிருந்தவர். "நல்ல குணமும் உள்ளமும் கொண்ட பனித்துளியை போன்ற தூய்மையான ஆன்மாவை கொண்டவர்" என்று அவருடன் பழகியவர்களில் ஒருவர் எழுதியிருந்தார். இறக்கும்போது அவருக்கு வயது 21

**எட்வட் காஸ்மியர்ஸ்கி :** 1919ல் பிறந்தவர். தீவிரத்தன்மை, விவேகம் மற்றும் நேர்மைக்காக அறியப்பட்டவர். இளையோர் மன்றத்தில் அவர் தனது இசை திறமையை வளர்த்துக் கொண்டார். நன்கு சிந்திக்கும் ஆற்றலும் வாழ்வில் முதிர்ச்சிப்பெற்ற ஆழமான முடிவுகளை எடுத்துரைப்பவராகவும் திகழ்ந்தார். சிறையில் மூத்த கைதிகள் மீது மிகுந்த அன்பு காட்டினார். தம்மை துன்புறுத்தியவர்கள் மீது எந்த வெறுப்பு விரோதமுமில்லாமல் அன்போடு ஏற்று மகிழ்ந்தார். இறக்கும்போது அவருக்கு வயது 22.

**இறுதியாக :** இந்த 5 இளையோர்கள் இறைபற்றிலும் நம்பிக்கையிலும் மற்றும் சலேசிய ஆன்மீக உணர்விலும் வாழ்ந்தவர்கள் என்பதாலேயே அவர்கள் சிறை பிடிக்கப்பட்டனர். செபமாலை, தொன் போஸ்கோ மற்றும் சகாய அன்னை நவநாட்கள் அனுசரிப்பது, நல்ல ஒப்புரவு பெற்று தினமும் நற்கருணை உட்கொண்டு செபிப்பது, பிறருக்காக உழைப்பது, உதவுவது, தேவை ஏற்பட்டால் உயிரையே தியாகம் செய்வது என தங்கள் வாழ்வில் நிரூபித்தவர்கள். அவர்களது இறைபற்று மற்றும் இறை பராமரிப்பின் மீதுள்ள ஆழ்ந்த நம்பிக்கைஒருபோதும்தளரவில்லை. அதுவே அவர்களை இறுதிவரை நம்பகமான மறைசாட்சிகளாக உயர்த்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

## இயேசுவின் தூய்மைமிகு இதயம் பற்றிய சிறப்பு நிகழ்வுகள்

திரு. புல்லோன் ஜோ லூயிஸ்

இயேசுவின் இதயத்தைத் தியானிக்க நமக்கு அளிக்கப்பட்ட அற்புதமான மாதம் இம்மாதமாகும். அவரின் இதயம் அன்பின் பிறப்பிடம், ஆறுதலின் உறைவிடம், இன்பத்தின் இருப்பிடம், உறவுகளின் சங்கமம், கருணையின் வற்றாத நதி. இந்த இதயத்தின் இயக்கம் அன்பு செய்யவும், அன்பினைப் பெறவும் நமக்காக கையளிக்கப்பட்ட மாபெரும் கொடை. நமது விசுவாசம், நம்பிக்கை, அன்பு ஆகியவற்றின் பிறப்பிடமும், ஊற்றும், உயர்வும் இயேசுவின் இதயமே. இத்தகு இயேசுவின் திருஇருதய பக்தி நம்மை இறையன்பில் உறவில் பற்றுறுதிக் கொள்ள உதவுகிறது. இந்த திருஇருதய பக்தி, புனித ஆன்சலம், புனித பெர்னார்டு வாழ்ந்த காலக்கட்டத்தில் அதாவது கி.பி. 1050 மற்றும் கி.பி. 1150ம் ஆண்டுகளில் தோன்றியது. கி.பி. 12ம் நூற்றாண்டிலிருந்துதான் இப்பக்தி முயற்சி கத்தோலிக்கத் திருஅவையினரிடையே மலரத் தொடங்கியது.

இறையியல் வல்லுநர்களான புனித பெலவேந்திரன் புனித பெரிய கெத்தூர்த்து இவர்களின் காலத்தில் இப்பக்தி பிரபலமானது, இயேசுவின் அன்பு, இரக்கம், கனிவு, பரிவு, பாசம், கையளிப்பு ஆகிய மறைபொருள்கள் திருஅவையில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தப்பட்டு தியான செபங்கள் தோன்றின. புனித பெரிய ஆல்பர்ட், புனித சிரியா கத்தரீன், புனித பிரான்சிஸ் தெ சேல்ஸ் மற்றும் புனித ஆசீர்வாதப்பர் சபையினர், தோமினிக்கன் சபையினர், கர்த்தூசியஸ் சபையினரின் தீவிர முயற்சியால் இத்திரு இதய பக்திப் பழக்கம் உலகெங்கும் பரவியது. பிரான்ஸ் நாட்டில் பாரே-லே-மோனியல் என்னும் இடத்தில் சந்திப்பு மட ஆலயத்தில் கி.பி. 1673-1675ல் புனித மார்கரெட் மேரி அலகோக் என்னும் அருட்சகோதரி இயேசுவின் திரு இருதய காட்சிகள் பல கண்டார். அதுசமயம் இயேசுவின் திரு இருதய பக்தியைக் கடைபிடிப்போருக்கு 12 சிறப்பான வாக்குறுதிகளை அப்புனிதையின் வாயிலாக மாதத்தின் முதல் வெள்ளி மற்றும் வருடாந்திர விழா நாட்களில் இயேசுவின் திரு இருதயத்திற்கு அர்ப்பணிக்க அறிவுறுத்தினார்.

கி.பி. 1765ம் ஆண்டு முதல் திருச்சபையின் வழிபாட்டு கால அட்டவணையில் அதிகாரப்பூர்வமாக இயேசுவின் மகிமைக்காக ஒருநாள் ஒதுக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து திருத்தந்தையர்கள், 9ம் பத்திநாதர் 13ம் சிங்கராயர் 11ம் பத்திநாதர் முதலியோர் இப்பக்தி பழக்கத்தை மிகவும் ஊக்குவித்தனர். கி.பி. 1856ம் ஆண்டு திருத்தந்தை 9ம் பத்திநாதர் இப்பக்தியை ஊக்குவித்ததோடு தனிக்கத்தோலிக்கர் குடும்பம், குழுக்கள், துறவற சபையினர் அனைவரையும் இயேசுவின் திரு இருதயத்திற்கு தங்களை அர்ப்பணிக்க அறிவுறுத்தினார். புனித கிரேஸ்தேவில் பெரியும் என்பவருக்குக் கிடைத்த சாட்சிகளின் அடிப்படையில் கி.பி. 1899ம் ஆண்டில் திருத்தந்தை 13ம் சிங்கராயர் அனைத்துலகையும் இயேசுவின் திரு இருதயத்திற்கு பரிகாரம் செய்வதின் அவசியத்தைக் குறித்து ஒரு திருமடல் எழுதினார். முதல் வெள்ளிக்கிழமை தலைவெள்ளிக்கிழமை பக்தி பரவலாயிற்று.

திருத்தி அமைக்கப்பட்ட திருவழிபாட்டு புதிய பதிப்பில், இயேசுவின் திருஇருதய விழா, தூய ஆவியின் பெருவிழாவை அடுத்து 2ம் வாரத்தில் கொண்டாட ஆணையிட்டது. இப்பக்தி முயற்சி ஆரம்பத்தில் குறிப்பிட்டதுபோல் கத்தோலிக்கர்களுக்கே உரியது. ஆங்கில, பிரிட்டன், இறையியலார்களான புனித ஈசாக்கு அப்புரோ, புனித பெர்னார்டு மற்றும் புனித தாமஸ் காட்வின் போன்றவர்கள் இருதய பக்தியினைப்பற்றி விளக்கமாக எழுதியுள்ளனர். ஆராதனைக்கும் வணக்கத்திற்கும் புகழ்ச்சிக்குரிய இயேசுவின் திரு இருதயம் திரு இருதய பக்தி பழக்கம். இன்று நாம் வாழும் காலக்கட்டத்தில் பரவலாக இருப்பினும், இயேசுவின் திரு இருதயத்திற்கு மிகுந்த வருத்தம் தரும்படியானவைகள் மலிந்துள்ளன. மனித நேயமற்ற மனிதாபமானமற்ற வன்ம செயல்கள் மிகுந்துள்ளன. இயேசுவின் இதயம் இரத்தம் கசிந்து கொண்டிருக்கிறது. அன்புக்கு எதிரான பகைமை, வஞ்சகம், பழிக்குப்பழி போன்ற தீமைகள் விஞ்சுகின்றன. இயேசுவின் திரு இருதயத்தைப் போன்று நம் இதயம் விளங்க வேண்டும். புனித சின்ன தெரசம்மாள் செபிக்கும்போதெல்லாம் "இதயத்தில் தாழ்ச்சியும், சாந்தமும் உள்ள இயேசுவே, என் இதயத்தை உமது இதயத்தைப்போல் ஆக்கியருளும்" என்றே வேண்டிக்கொள்வார்.

இயேசுவின் திரு இருதய பக்திக்காய் ஒவ்வொரு இல்லங்களிலும் திரு இருதய படத்தை திருநிலைப்படுத்தி பெரிதாக வைத்திருந்தால் மட்டும் போதாது. நம்மைப் பகைப்பவர்களையும் மனதார அன்பு செய்ய வேண்டும். இயேசுவின் திரு இருதய படத்திற்கு அணையா விளக்கேற்றி தூபம் இட்டு வணங்கினால் மட்டும் போதாது நம் நெஞ்சங்களில் அன்பு எனும் தீபம் போட்டி, பொறாமை, பேராசை, பொருளாசை, காமம், கோபம் போன்ற சூறாவளிப் பேய்க்காற்றில் அணைந்து போகாது பாதுகாக்க வேண்டும். அழுக்காறு கொள்ளாது அடக்க ஒடுக்கமாக ஆடம்பரமற்ற, ஆர்பாட்டமற்ற, வாழ்வு எனும் விளக்குத் தண்டின்மேல் நம் இதய தீபம்

வைக்கப்பட வேண்டும். ஏற்றத்தாழ்வு, சாதிய வேறுபாடு, கல்லாமை போன்ற குறைபாடுகளைக் களைந்து எரியும்போதுதான் உண்மையிலேயே நாம் திரு இருதய அன்பிற்குச் சொந்தக்காரர்களாகிறோம். உண்மை என்ற உழவு செய்து, அன்புநீர் பாய்ச்சி, பொய்மைகளை அகற்றி, உவகை அன்பின் இதயமாம் இயேசுவின் அன்பில் வேரூன்றி பிறரன்பில் நிலைத்திருப்போம்.

## பள்ளிகள் திறப்பு - பொது செபவழிபாடு

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

இறை இயேசுவில் பிரியமான மாணவச் செல்வங்களே, மதிப்பிற்குரிய இருபால் ஆசிரியப் பெருமக்களே, இன்று நாம் அனைவரும் இப்புதிய கல்வியாண்டின் தொடக்க நாளில் இறைவன் திருமுன் ஒன்றாய் கூடியுள்ளோம். இந்நேரத்தில், இறைவன் கடந்தாண்டு முழுவதும் நமக்குத் தந்த நல்ல உடல்சுகத்திற்காகவும், கல்வி அறிவு, திறமைகள், பாதுகாப்பு, பொருளாதார உதவிகள், தேர்வில் வெற்றி போன்ற அனைத்து நன்மையான செயல்களுக்கும் இறைவனுக்கு நாம் கோடான கோடி நன்றிகளைச் செலுத்துவதோடு மட்டுமன்றி, இப்புதிய கல்வி ஆண்டினையும் இறைவனின் பாதத்தில் சமர்ப்பித்து இவ்வாண்டு முழுவதும் நம்மை பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்றும், வல்லமையான கரங்களினால் ஆசீர்வதிக்க வேண்டுமென்றும் இன்றைய செபவழிபாட்டில் நம்மையே தாழ்த்தி வரம் கேட்டு ஒருமனதாய் செபிப்போம்.

**பாடல்: ஓ பரிசுத்த ஆவியே...(அ) ஒளியூட்டும் இறையாவியே...**

**விவிலிய வாசகம்:** "என் காலடிக்கு உம் வார்த்தையே விளக்கு, என் பாதைக்கு ஒளியும் அதுவே" என்று திருப்பாடல்களில் எழுதியதுபோல நம் வாழ்க்கை ஒளிதரும். இறைவன் நமக்கு தரும் செய்தியை கேட்டு தியானிப்போம் (நீதிமொழி 3: 1-12).

**செபவழிபாடு:** (தேவையான பொருட்கள்) குத்துவிளக்கு, சிறியசெடி (தொட்டியில்) மலர்மொட்டுக்கள், புதிய பாடப்புத்தகங்கள், புதிய சீருடை, கல்வி நிலையத்தின் பாதுகாவலர் படம் அல்லது சுருபம்.

இறைவா, எனது நாளை நான் தொடங்கும்முன் உமது தொடுதலையும், உம்மோடு உறவாடவும் வந்துள்ளேன் என்று தாகூர் தனது பாடலில் இறைவனுடைய முக்கியத்தை கூறுகிறார். நம்முடைய ஒவ்வொரு நாளும் இறைவனின் உதவியோடு மட்டுமே ஆரம்பிக்கப்படுகிறது என்பதை உணர்ந்த பேரருள் ஜோதியாம் இறைவனை நம்மிடையே அழைக்க, ஒளியாம் இறைவனை குத்துவிளக்கினை ஏற்றி இறைப்பிரசன்னத்தை உணர்வோம். (தலைமை ஆசிரியர் குத்து விளக்கினை ஏற்றலாம்).

**ஒளி:** ஒளியாம் இறைவா, இக்கல்வி ஆண்டினை தொடங்க இருக்கும் எங்கள் அனைவரின் உள்ளத்திலும் மனதிலும் இருக்கும் அறியாமை, இயலாமை, கல்லாமை போன்ற இருளை அகற்றி, உமது

தெய்வீக ஒளியினால் எங்களைப் புதுப்பித்து, புதுப்பொலிவுடன் திகழவும், படிப்பிலும், ஒழுக்கத்திலும் சிறந்து விளங்க வேண்டுமென்றும், உம்முடைய ஒளி எங்களை என்றும் வழிநடத்த வேண்டுமென்று இறைவா இந்த ஒளியை (குத்துவிளக்கை) உமக்கு அர்ப்பணிக்கிறோம்.

**சிறிய செடி (தொட்டியில்):** இயற்கையின் பிறப்பட மானவரே இறைவா, இச்சிறிய செடியானது நாளடைவில் வளர்ந்து பெரிய மரமாகி பல வழிகளில் அனைவருக்கும் பலன்தருவதுபோல, எங்கள் பள்ளியெனும் நிலத்திலே நல்ல பலன்தரும் மரங்களைப்போல நல்ல மாணவ மாணவிகளாக கற்றுத்தேர்ந்து எங்கள் பெற்றோர்களுக்கும், சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் பயனுள்ளவர்களாக எம்மை உருவாக்க வேண்டுமென்று செபித்து இந்தச் சிறிய செடியை உமக்கு காணிக்கையாக தருகிறோம்.

**மலர்கள்:** அன்பே உருவான இறைவா, இவ்வழகிய மலர்களைப்போல இவ்வாண்டு இப்பள்ளியில் புதிதாக சேர்ந்திருக்கும் புதிய மாணவ மாணவிகள் மற்றும் ஆசிரியப் பெருமக்களையும் வரவேற்கிறோம். இவர்களுக்கு உமது ஆசீர் நிறைவாக கிடைக்கவும், தங்களிடமுள்ள திறமைகள், அறிவாற்றல்கள் வெளிப்படுத்தவும், பள்ளியின் விதிமுறைகளை ஏற்று, அனைவரோடும், மகிழ்வோடும், அன்போடும் இணைந்து செயல்பட உமக்கு அர்ப்பணிக்கிறோம்.

**புதிய நோட்டு புத்தகம்:** ஞானத்தின் இருப்பிடமே இறைவா, இந்த கல்வியாண்டில் நாங்கள் படிக்கப்போகும் எல்லா (Subject) பாடங்களையும், ஆசிரியர்கள் நடத்தும்போது தெளிவாகவும், எளிமையாகபவும் புரிந்துக் கொள்ளும் ஞானத்தையும், படித்ததை மனதில் வைத்துக்கொள்ளும் திறனும், போட்டிகளிலும், சவால்களிலும், திறமைகளையும் நல்லவைகளுக்காக பயன்படுத்த வேண்டுமென்று உம்மை புத்தகங்களை அர்ப்பணிக்கின்றோம்.

**புதிய சீருடை:** தூய்மையின் இருப்பிடமே இறைவா, பள்ளிகளில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை தவிர்க்கவும், அனைவரும் சமம் என்பதை உணர்த்தும் இந்த சீருடையை நாங்கள் அணியும் ஆடைகளில் மட்டுமல்லாமல் எங்களுடைய பழக்க வழக்கங்கள், உரையாடல்கள், நட்பில் ஏழை-பணக்காரர், உயர்ந்தவர்-தாழ்ந்தவர், சாதி, மதம், இனம், மொழி போன்றவைகளில் வேற்றுமை பாராட்டாமல் இறைவன்முன் எல்லா குழந்தைகளும் ஒன்று என்ற ஒருமைப்பாட்டை எங்களுக்குள் வளர்த்துக்கொள்ளவும் அனைவருடனும் சகோதர உணர்வோடும், நட்போடும் பழகும் நல்ல மனதைத்தர வரம் கேட்டு இந்த சீருடைகளை உமக்கு அர்ப்பணிக்கிறோம்.

**பள்ளி பாதுகாவலரின் படம் (அல்லது) சுரூபம்:** நல்லாயனாம் இறைவா, இப்பள்ளியினை திறம்பட நடத்திக் கொண்டிருக்கும் எங்கள் பள்ளி தலைமை ஆசிரியரை உமது பாதத்தில் ஒப்புக்கொடுக்கிறோம்.

தூய ஆவியின் வரங்களால் இவரை நிரப்பியருளும். தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பள்ளியையும், குழந்தைகளையும் திறம்பட வழிநடத்தவும், எதிர்பாராமல் வரும் பிரச்சனைகளை சுமூகமாக தீர்க்கும் திறமையும் பெற்றோர்கள், ஆசிரியர்களுக்கு ஒத்துழைப்பும், ஆலோசனையும் கிடைக்கும்படி செய்தருளும். மேலும் எங்கள் தலைமை ஆசிரியரோடு அனைத்து ஆசிரியர்களும் இணைந்து இப்பள்ளியின் பாதுகாவலரான-- ------உதவியோடும் முன்மாதிரியாக இருந்து அனைத்து பள்ளிகளுக்கும் எடுத்துக்காட்டான பள்ளியாய் திகழ வரம்தர வேண்டுமென்று செபித்து இந்த சுரூபத்தை அர்ப்பணிக்கிறோம்.

**முடிவுரை: நன்றியால் துதிப்பாடு...**

பரலோகத்தில் இருக்கிற...
அருள்மிகப் பெற்றவளே...
தந்தைக்கும் மகனுக்கும்...

ஒருவர் மற்றவரின் கரங்களைப் பிடித்து செபித்துக் கொண்டு நாம் நமது வகுப்பறைகளுக்குச் செல்வோம்.

## திருஅவைச் செய்திகள்

திரு. சாண்டோ

**நீதி, உண்மை, எதிர்நோக்கின் அடிப்படையில் அமைதி எழுப்பப்பட**

தான் திருத்தந்தையாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு வாரத்திற்குப்பின் இவ்வெள்ளியன்று திருப்பீடத்திற்கான பல்வேறு நாடுகளின் தூதுவர்களை திருப்பீடத்தில் சந்தித்த திருத்தந்தை 14ஆம் லியோ அவர்கள், அமைதி, நீதி மற்றும் எதிர்நோக்கின் பாதையை பின்பற்றுமாறு அழைப்பு விடுத்தார். மனிதகுலமனைத்திற்கும் சேவையாற்ற வேண்டிய திருஅவையின் அர்ப்பணத்தை மீண்டும் எடுத்துரைத்த திருத்தந்தை 14ஆம் லியோ அவர்கள், தூதரக முகவர்களை உள்ளடக்கிய சமூகம் என்பது, வாழ்வின் இன்ப துன்பங்களை மக்களோடு பகிர்வது மட்டுமல்ல, மனித மற்றும் ஆன்மீக மதிப்பீடுகளில் தன் அடித்தளத்தைக் கொண்டுள்ளது என்றார்.

மேய்ப்புப்பணி அக்கறையைக் கொண்டுள்ள திருஅவை இந்த தூதரக முகவர்கள் சமூகத்தில் சலுகைகளைத் தேடவில்லை, மாறாக, பாலங்களைக் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்புகளைத் தேடுகின்றது என்றார் திருத்தந்தை பதினான்காம் லியோ.ஏழைகள் மற்றும் ஓரங்கட்டப்பட்டவர்களுக்கான அர்ப்பணங்கள், இயற்கையை பாதுகாப்பதில் கவனம், செயற்கை நுண்ணறிவு போன்றவைகள் குறித்து திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பணித் தொடர்ச்சியாக தொடர்ந்து தூண்டுதல்களைப் பெற்றுவருவதாக அறிவித்த திருத்தந்தை 14ஆம் லியோ அவர்கள், உலகம் முழுவதும் உள்ள நாடுகளில் திருஅவை தன் உறவை பலப்படுத்த வேண்டும் என கேட்டுக் கொண்டார்.திருஅவையின் அரசியல் தூதரகப் பணிகளில் அமைதி, நீதி

மற்றும் உண்மை ஆகிய மூன்றும் அடிப்படையாக இருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்திய திருத்தந்தை, அமைதி என்பது போர் அற்ற நிலை என்பதல்ல, மாறாக மனித மனங்களின் தாழ்ச்சியிலும், கவனமான உரையாடலிலும், தற்பெருமை மற்றும் பழிவாங்கலை மறுதலித்தலிலுமிருந்து பிறக்கிறது என்றார்.கருவில் வளரும் குழந்தை முதல் முதியோர் வரை அனைவரும் மாண்புடன் நடத்தப்படல், நோயாளிகள், வேலைவாய்ப்பற்றோர், குடிமக்கள், புலம்பெயர்ந்தோர் என அனைவரும் அவர்களுக்கேயுரிய மாண்புடன் நடத்தப்படல் என்பதில் நீதி அடங்கியுள்ளது என்ற திருத்தந்தை, இன்றைய உலகில், குறிப்பாக வலைத்தளங்களில் பொய்ச் செய்திகள் பரப்பப்பட்டுவரும்போது உண்மையை பிறரன்போடு எடுத்துரைக்க வேண்டியது திருஅவையின் கடமையாகிறது என்பதையும் சுட்டிக்காட்டினார்.இந்த நம்பிக்கையின் யூபிலி காலம் மனந்திரும்பல், புதுப்பித்தல், மோதல்களைக் கைவிடல் போன்றவைகளுக்கான காலம் என்பதையும் தன் உரையின் இறுதியில் நினைவூட்டினார் திருத்தந்தை 14ஆம் லியோ.

## திருத்தந்தையின் அமைதி விண்ணப்பத்திற்கு உக்ரைன் கிறிஸ்தவர் நன்றி

திருத்தந்தை 14ஆம் லியோ அவர்களை வியாழனன்று திருப்பீடத்தில் சந்தித்த உக்ரேனிய கிரேக்க கத்தோலிக்கக் கிறிஸ்தவ சபையின் தலைவர், அமைதிக்கு அழைப்பு விடுத்துவரும் திருத்தந்தைக்கு தன் நன்றியை வெளியிட்டார்.திருப்பீடத்தின் நூலகத்தில் திருத்தந்தை 14ஆம் லியோ அவர்களைச் சந்தித்து தன் வாழ்த்துக்களை வெளியிட்ட கீவ் நகரின் உயர் பேராயர் பிதாப்பிதா Sviatoslav Shevchuk அவர்கள், துன்புறும் உக்ரைன் மக்களுக்கான உண்மையான, நீதியான மற்றும் நீடித்த அமைதி இடம்பெற வேண்டும் என கடந்த ஞாயிறன்று அல்லேலூயா வாழ்த்தொலி உரையில் திருத்தந்தை அழைப்பு விடுத்ததற்கு தான் நன்றியுள்ளவராக இருப்பதாகத் தெரிவித்தார்.உக்ரைன் மக்களின் துன்பங்களின் குரலாக இருந்த திருத்தந்தையின் விண்ணப்பம், சிறைக்கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும், கடத்தப்பட்ட குழந்தைகள் உக்ரைனுக்குள் திருப்பி அனுப்பப்பட வேண்டும் என்பதையும் உள்ளடக்கியிருந்ததையும் சுட்டிக்காட்டினார் உக்ரைன் கிரேக்க கத்தோலிக்கத் தலைவர்.இந்த சந்திப்பின் இறுதியில் உக்ரைன் மக்களின் துன்பங்களை வெளிப்படுத்தும் விதமாக "இரங்கற்பாட்டு செபம்" என்ற தலைப்பிட்ட ஓவியம் ஒன்றை திருத்தந்தைக்கு பரிசளித்தார் கிரேக்க கத்தோலிக்கத் தலைவர். மோதலில் இறந்த ஒரு வீரரின் தந்தையால் இந்த ஓவியம் உருவாக்கப்பட்டிருந்தது.

## ஆயர்கள் : ஆப்ரிக்காவுக்கு தேவை அனுதாபமல்ல, நீதி.

ஆப்ரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையேயான உறவு, ஒருவர் ஒருவருக்கான மதிப்புடனும், சுற்றுச்சூழல் குறித்த ஒத்துழைப்புடனும், மனித மாண்பை மையமாக வைப்பதுடனும் இடம்பெறவேண்டும் என அழைப்பு விடுத்துள்ளது ஐரோப்பிய மற்றும் ஆப்ரிக்க ஆயர் பேரவைகளின்

ஒன்றிணைந்த அறிக்கை. ஐரோப்பிய வெளியுறவு அமைச்சர்களின் கூட்டம் இம்மாதம் 21ஆம் தேதி இடம்பெறுவதற்கு முன்பாக ஐரோப்பிய ஆயர் பேரவையும் ஆப்ரிக்க ஆயர் பேரவையும் இணைந்து அறிக்கை ஒன்றை வெளியிட்டு, இன்று ஆப்ரிக்காவிற்கு தேவைப்படுவது பிறரன்பு உதவி நடவடிக்கை அல்ல, மாறாக நீதி என அதில் குறிப்பிட்டுள்ளனர்.ஐரோப்பிய அவையின் வெளிநாட்டுக் கொள்கைகளில் முக்கியத்துவம் கொடுப்பவைகள் குறித்தவைகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் வந்துள்ளதுக் குறித்து தங்கள் கவலையை வெளியிடும் ஆயர்கள், ஏழை நாடுகளுக்கு ஒருமைப்பாட்டுடன் உதவ வேண்டிய முக்கியத்துவம் மறைந்து, தற்போது பொருளாதார இலாபங்களுக்காக கொள்கைகள் வகுக்கப்பட்டு ஐரோப்பா செயல்படுவதாகக் கவலையை வெளியிட்டுள்ளனர்.

**உதவிக்கும் ஒருமைப்பாட்டிற்கும் விண்ணப்பிக்கும் மியான்மார் திருஅவை**

மார்ச் மாதத்தின் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டிருந்தாலும், புதிய திருத்தந்தையின் தேர்வு தங்களுக்கு பெரு மகிழ்ச்சியைத் தந்ததாக மியான்மார் தலத்திருஅவை அறிவித்துள்ளது. புதிய திருத்தந்தையாக 14ஆம் லியோ அவர்கள் தேர்வுச் செய்யப்பட்டது குறித்து மகிழ்ச்சியை வெளியிட்ட மியான்மார் திருஅவைத் தலைவர்கள், இஸ்லாமியர், புத்த மதத்தினர், பிற கிறிஸ்தவ சபையினர் என அனைவரும் திருத்தந்தையின் தேர்வு குறித்து மகிழ்ச்சி அடைந்துள்ளதாகவும், மியான்மாரின் அமைதிக்கு அவர் ஊக்கமளிக்க வேண்டும் என எதிர்பார்ப்பதாகவும் அறிவித்தனர். மார்ச் மாதம் 28ஆம் தேதி இடம்பெற்ற நில அதிர்ச்சியின் பேரிழப்புக்கள், தொடர்ந்து கொண்டிருக்கும் உள்நாட்டு பதட்ட நிலைகள் போன்றவைகளால் பாதிக்கப்பட்டிருக்கும் மியான்மார் நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு உதவி, ஒருமைப்பாடு மற்றும் ஆதரவு தேவைப்படுவதாக தலத்திருஅவை விண்ணப்பம் ஒன்றை விடுத்துள்ளது.கட்டுமானப் பணிகளில் மட்டும் கவனம் செலுத்தினால் போதாது, மாறாக உள்நாட்டு மோதல்களால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களில் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை உள்ளது என்றார் மண்டலாய் குருகுல முதல்வர் அருள்பணி பீட்டர் கீ முவாங்.இதற்கிடையே மண்டலாய் மறைமாவட்டத்தின் அவசரகால இடர்துடைப்பு அமைப்பு, பாதிக்கப்பட்ட கோவில்கள், மேய்ப்புப்பணி மையங்கள், மறைக்கல்வி வகுப்பறைகள், சமூக மையங்கள் போன்றவைகள் குறித்து கணக்கெடுத்து வருகிறது.

**கத்தோலிக்க ஊடகங்களின் பங்களிப்பு பயனுள்ளது**

கத்தோலிக்கத் திருஅவை, ஊடகங்களில் இருப்பது நவீன உலகிற்கு மிகவும் முக்கியமானது என்றும், பல்வேறு தலத்திருஅவைகளின் செயல்பாடுகள், இளைஞர்களின் பணிகள் போன்றவற்றை ஆவணமாகத் தயாரித்து மக்களுக்கு சமூக வலைதளங்களின் வழியாக வெளிப்படுத்தி வரும் பணி பயனுள்ளதாக இருக்கின்றது என்றும் கூறினார் அருள்பணி Oleksandr

Zelinsky. மே 22, வியாழனன்று உக்ரைனில் நிலவும் போர், கத்தோலிக்க ஊடகங்களின் பங்களிப்பு, யூபிலி ஆண்டு திருப்பயணம் ஆகியவை குறித்து வத்திக்கான் செய்திகளுக்கு வழங்கிய நேர்காணலின்போது இவ்வாறு கூறினார் (Eternal Word Television) EWTN எனப்படும் தொலைக்காட்சி நிறுவனத்தின் இயக்குநர் அருள்பணி Oleksandr Zelinsky. பரபரப்பான தன்மை மற்றும் வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் கத்தோலிக்க செய்தி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன என்றும், மக்களுக்கு ஆர்வத்தையும் தெளிவையும் ஏற்படுத்தும் வகையில் மிகைப்படுத்தாமல் செய்திகளைக் கொண்டு செல்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவித்தார் அருள்பணி Oleksandr Zelinsky.

## சுடர் வாசகர் போட்டி - 122 சரியான விடைகள்

1. 1857 மார்ச் 9ம் நாள்
2. புனித மரிய மசரெல்லோ
3. தங்கச் சுரங்கம்
4. மத்தியாஸ்
5. புனித மரிய மசரெல்லோவை
6. காசியா நகர் புனித ரீத்தா
7. திருத்தந்தை 7ம் பத்திநாதர்
8. ஒவ்வொரு சொல்லிற்கும் செயலிற்கும் உயிர்ப்பு தேவை.
9. 60 குருக்களைத் தேர்ந்தெடுத்தார்கள்
10. புனித சூசையப்பர்
11. ஜோசப் கொவால்ஸ்கி
12. 1922ம் ஆண்டில் "பாப்டிஸ்ட் மிஷனரி சொசைட்டி" என்ற அமைப்பினர்
13. இஸ்பானிய கட்டிடக் கலைஞர் அந்தோனி கௌத்
14. செப்டம்பர் 18, 1814ம்
15. இயேசு பேதுருவிடம்

### குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

1. S. குழந்தை மேரி, பெரவள்ளூர்
2. C. துரைராஜ், சிவகாசி
3. C. ஜெயந்தி பெர்னான்டஸ், சென்னை

# சுடர் வாசகர் போட்டி - 123

1. புனித நார்பெர்ட் எந்தக் குடும்பத்தில் பிறந்தார்?
2. பர்னபா மாற்குவைக் கூட்டிக்கொண்டு எங்குச் சென்றார்?
3. அருளாளர் பிரான்சிஸ் கெசியும் அவரது தோழர்களும் எந்தாண்டு சிறைப்பிடிக்கப்பட்டனர்?
4. மூவொரு கடவுள் பெருவிழா நமக்குச் சொல்லித்தரும் உன்னதமான பாடமென்ன?
5. இத்திருவிருந்தில் பங்கேற்காத எவரும் எங்கு பங்கேற்க இயலாது?
6. "சிறைக்கைதிகளின் குருவும், இத்தாலிய குருக்களின் ஒளியாகவும்" திகழ்ந்தவர் யார்?
7. வெற்றியின் அடையாளமாக சீடர்களுக்கு பரிசு தருபவர் யார்?
8. இயேசுவின் பெயரைச் சொல்லிக் கொண்டே உயிர்த் துறந்தவர் யார்?
9. புனித ஜோசப் கபாசோ எந்த குருமடத்தில் அறநெறி இறையியல் படிப்பைப் படித்தார்?
10. கத்தோலிக்கத் திருஅவையின் தலைவர் 7ம் பத்திநாதரை எந்த ஆண்டு சிறையிலடைத்தனர்?
11. அன்னை மரியாள் யாருக்கு எந்த ஆண்டு காட்சியளித்தார்?
12. "நல்ல குணமும் உள்ளமும் கொண்ட பனித்துளியை போன்ற தூய்மையான ஆன்மாவை கொண்டவர்" யார்?
13. வந்துள்ளேன் என்று தாகூர் தனது பாடலில் இறைவனுடைய முக்கியத்தை எவ்வாறு கூறுகிறார்?
14. இயேசுவின் தூய்மைமிகு இதயம் எந்த ஆண்டுகளில் தோன்றியது?
15. கிரேக்க கத்தோலிக்கத் தலைவர் திருத்தந்தைக்கு என்ன தலைப்பிட்ட ஓவியத்தை பரிசளித்தார்?


## தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ.200/- செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
கைப்பேசி எண் : 9385201453

பெயர்: ..................................
முகவரி: ..................................
..................................
..................................
..................................

## அடுத்த சுடரில்

### பகுதி 1 : வழிபாட்டு வழிக்காட்டி

புனித தோமா (இந்தியாவின் திருத்தூதர்) பெருவிழா
ஆண்டின் பொதுக்காலம் 14ம் ஞாயிறு - திருப்பலி
அருளாளர் மரிய ரொமேரோ மெனேஸஸ் - திருப்பலி
புனித பெனடிக்ட் - திருப்பலி
ஆண்டின் பொதுக்காலம் 15ம் ஞாயிறு - திருப்பலி
புனித கார்மெல் அன்னை - திருப்பலி
ஆண்டின் பொதுக்காலம் 16ம் ஞாயிறு - திருப்பலி
புனித யாக்கோபு திருவிழா - திருப்பலி
புனித சுவக்கின் அன்னம்மாள் திருவிழா - திருப்பலி
ஆண்டின் பொதுக்காலம் 17ம் ஞாயிறு - திருப்பலி
புனித அல்போன்சா முட்டாத்துபாடாத் திருவிழா - திருப்பலி
புனித லொயோலா இஞ்ஞாசியார் - திருப்பலி

### பகுதி 2 : நம்பிக்கையில் வளர ...

சென்னை சலேசிய சபையும் புனித தோமாவும்
மரியாளின் வாழ்வில் தூய சுவக்கின் அன்னம்மாள்
புனித இஞ்ஞாசியார் - வாழ்வு தரும் பாடம்
திருஅவைச் செய்திகள்

**அன்பு நிறைந்த வாசகர்களே!**

இம்மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை ஜுன் 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

# ஜூன் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | **ஞா** | **ஆண்டவருடைய விண்ணேற்றம் பெருவிழா** | **I.** திப. 1: 1-11<br>**II.** எபி. 9: 24-28,10:19-23 | லூக். 24: 46-53 |
| 2 | தி | புனிதர்கள் மர்சலீனஸ், பீட்டா | திப. 19: 1-8 | யோவா. 6: 22-29 |
| 3 | செ | புனித தோமினிக் சாவியோ (சலேசிய புனிதர்) | திப. 20: 17-27 | யோவா. 17: 1-11 |
| 4 | பு | | திப. 20: 28-38 | யோவா. 17: 11-19 |
| 5 | வி | புனித போனிப்பாஸ் | திப. 22:30, 23: 6-11 | யோவா. 17: 20-26 |
| 6 | வெ | புனித நார்பெர்ட் | திப. 25: 13-21 | யோவா. 21: 15-19 |
| 7 | ச | | திப. 28: 16-20, 30-31 | யோவா. 21: 20-25 |
| 8 | **ஞா** | **பெந்தக்கோஸ்து ஞாயிறு பெருவிழா** | **I.** திப. 2: 1-11<br>**II.** உரோ. 8: 8-17 | யோவா. 14:15-16,23-26 |
| 9 | தி | மரியா திருஅவையின் அன்னை | 2கொரி. 1: 1-7 | மத். 5: 1-12 |
| 10 | செ | | 2கொரி. 1: 18-22 | மத். 5: 13-16 |
| 11 | பு | புனித பர்னபா, திருத்தூதர் | 2கொரி. 3: 4-11 | மத். 5: 17-19 |
| 12 | வி | அருளாளர் பிரான்சிஸ் கெசி மற்றும் தோழர்கள் | 2கொரி. 3:15-4:1,3-6 | மத். 5: 20-26 |
| 13 | வெ | பதுவா நகர்ப் புனித அந்தோணியார் | 2கொரி. 4: 7-15 | மத். 5: 27-32 |
| 14 | ச | | 2கொரி. 5: 14-21 | மத். 5: 33-37 |
| 15 | **ஞா** | **தூய்மைமிகு மூவொரு கடவுள் பெருவிழா** | **I.** நீமொ. 8: 22-31<br>**II.** உரோ. 5: 1-5 | யோவா.16: 12-15 |
| 16 | தி | | 2கொரி. 6: 1-10 | மத். 5: 38-42 |
| 17 | செ | | 2கொரி. 8: 1-9 | மத். 5: 43-48 |
| 18 | பு | | 2கொரி. 9: 6-11 | மத். 6: 1-6, 16-18 |
| 19 | வி | புனித ரோமுவால்டு | 2கொரி. 11: 1-11 | மத். 6: 7-15 |
| 20 | வெ | | 2கொரி. 11: 18.21-30 | மத். 6: 19-23 |
| 21 | ச | புனித அலோசியுஸ் கொன்சாகா | 2கொரி. 12: 1-10 | மத். 6: 24-34 |
| 22 | **ஞா** | **கிறிஸ்துவின் தூய்மைமிகு திருவுடலும் திரு இரத்தமும் பெருவிழா** | **I.** தொ.நூ. 14: 18-20<br>**II.** 1கொரி. 11: 23-26 | லூக். 9: 11-17 |
| 23 | தி | புனித ஜோசப் கபாசோ | தொ.நூ. 12: 1-9 | மத். 7: 1-5 |
| 24 | செ | **புனித திருமுழுக்கு யோவானின் பிறப்பு பெருவிழா** | **I.** எசா. 49: 1-6<br>**II.** தி.ப. 13: 22-26 | லூக். 1: 57 -66, 80 |
| 25 | பு | | தொ.நூ. 15: 1-12.17-18 | மத். 7: 15-20 |
| 26 | வி | | தொ.நூ. 16: 1-12. 15-16 | மத். 7: 21-29 |
| 27 | வெ | **இயேசுவின் தூய்மைமிகு இதயம் பெருவிழா** | **I.** எசே. 34: 11-16<br>**II.** உரோ. 5: 5-11 | லூக். 15: 3-7 |
| 28 | ச | புனித கன்னிமரியாவின் மாசற்ற இதயம் | தொ.நூ. 18: 1-15 | மத். 8: 5-17 |
| 29 | **ஞா** | **புனிதர்கள் பேதுரு, பவுல்: திருத்தூதர்கள் பெருவிழா** | **I.** திப. 12: 1-11<br>**II.** 2திமொ. 4: 6-8. 17-18 | மத். 16: 13-19 |
| 30 | தி | உரோமைத் திருஅவையின் முதல் மறைச்சாட்சியர் | தொ.நூ. 18: 16-33 | மத். 8: 18-22 |

# தீபகம்


தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம்

TO SHARE THE LIGHT

## வழங்கும்

## சிறார்களின் திருவிருந்துக்கான மறைக்கல்வி

Catechism for First Holy Communion




இப்போது விற்பனையில்




## சிறார்களின் உறுதிப்பூசுதலுக்கான மறைக்கல்வி

Catechism for Sacrament of Confirmation




இப்போது விற்பனையில்

## ஞாயிறு மறைக்கல்வி பாடநூல்கள்

Sunday Catechism Textbooks

(Cycle A, B and C)
(Available in Tamil and English)

| வகுப்புகள் | For Classes : |
|---|---|
| 1 முதல் 3 வரை | 1 - 3 |
| 4 முதல் 6 வரை | 4 - 6 |
| 7 முதல் 9 வரை | 7 - 9 |
| 10 முதல் 12 வரை | 10 - 12 |

+91 9385201453 Deepagam Don Bosco

# தீபகம் – தொன் போஸ்கோ
நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம்

நடத்தும்

ஞாயிறு மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான

## ஒருநாள் பயிலரங்கம்

விரைவில்...



அனைவரும் வருக! பலன் பெருக!!

மேலும் விபரங்களுக்கு :
+91 9385201453



தயாரிப்பு : **DEEPACT** (Deepagam Proclamation And Cultural Team)
கணினியேற்றம் : **கபிரியேல் மேரி** அட்டைப்பட வடிவமைப்பு : **ஜான் அலெக்சாண்டர்** - DEEPACT
தயாரிப்பில் மேற்பார்வை : **சாண்டோ, ஈசாக்** அச்சிட்டோர் : **சிகா அச்சகம்,** கீழ்ப்பாக்கம், சென்னை - 10